www.padippakam.com

கடல் : 3 • அலை : 3

நன்கொடை ரூ. 5/-

# தமிழ்த் தேசம்

திருவள்ளுவர் ஆண்டு 2031 • மேழம்-விடை • கி.பி. 2000 • ஏப்ரல்-மே

ஆசிரியர் : தியாகு



## அகலத் திறந்தது ஆனையிறவு :

# பாயாமல் வென்ற புலிகள்!

தமிழ் தமிழர் இயக்கத் திங்களேடு • தனிச்சுற்றுக்கு மட்டும்

படிப்பகம்

www.padippakam.com

# நிகரென்று கொட்டு முரசே!

எத்தனை நூற்றாண்டின்
குரல் இது
பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்
என ஓங்கி ஒலித்த
குரலின் அடியில்
எத்தனைத் துயரங்கள்
புதைந்திருக்கும்
'பறச்சியாவதேதடா
பணத்தியாவதேதடா'
என வெடித்துக் கிளம்பியவனின்
கண்களில்
எத்துனை யுகங்களின்
கண்ணீர்
கோயிலுக்குள் நுழையாதே
என்பது வெறும்
சிலைதனைத் தொழ
மறுப்பது மட்டும்தானா
இல்லை தோழர்களே
கோயில் என்பது
கல்விக்கூடம்
கல்வியில்
நுழையாதே என்றான்.
கோயில் என்பது
கருவூலம்
பங்கு கேட்காதே
என்றான்.
கோயில் என்பது
அதிகாரப் பீடம்
நுழையவிடாமல்
கவனமாய்
காவல் காத்தான்.
வெறும் கற்சிலையைக்
காவல் காக்க
அவன் என்ன
பைத்தியக்காரனா?
அவனவன்
தொழில் செய்து
இறைவனுக்குத்
தொண்டு செய்யலாம்
என்பதில் எத்தனை
நுணுக்கம் வாய்ந்த
மந்திரம் அது.
கதை சொன்னானே
கண்ணை அப்பியதாய்
மழலையை அரித்துச் சமைத்ததாய்
மனைவியை அனுப்பியதாய்
விதைத்த நெல்லை
சமைத்துப் போட்டதாய்
கோவணம் தந்ததாய்....
தெரியுமா தோழர்களே
இவன்களில் எவனும்
பூணூல் போட்டவனில்லை.
நடந்தோம்
ஆயிரமாயிரம் கதைகளோடும்
ஆயிரமாயிரம் சோகங்களோடும்
நடந்தோம்

இத்தனை மூர்க்கத்தனமாய்
எந்த இனத்தையும்
எவனும் அழித்திருக்க மாட்டான்
போரிட்டு
அழிக்கவில்லை
நம்மை
அப்படி அழித்திருந்தால்
உழுது உழுது
எவன் வண்டி வண்டியாய்
நெல் அனுப்பியிருப்பான்
கோவணத்தோடு குழியில்
இறங்கி
மடிசாரும், பஞ்சகச்சமும்
எவன் நெய்திருப்பான்.
அவன்
தயிர் சோற்றுக்கு
எந்த மனுஷி
மாட்டுக்குப்
புல் அறுத்திருப்பாள்.
அவனது புளியோதரைக்கு
எந்தப் பாட்டி
புளி நறுக்கியிருப்பாள்
தொந்தி பெருத்த பிணத்தை
வேகும் வரை
வெக்கை பொறுத்து
எரிப்பது யார்?
கோயில் குளத்துக்குத்
தூர் எடுப்பது
எவன்?
வேண்டுமே
மனிதர்கள்
மந்தை மந்தையாய்
வேண்டுமே.
போரிட்டு அவன்
நம்மை
அழிக்கவில்லை.
மாடு மேய்த்த
கோலை
நம்மிடம்
தந்து விட்டு
நம்மை
மேய்க்க ஆரம்பித்தான்.
நாம்
மாடு பழக்கினோம்.
அவன்
நம்மைப் பழக்கினான்.
வரலாறு என்பது
நமக்குச்
சாதகமாக மட்டுமே
நடந்திருக்க வேண்டும்
என்பதல்ல.....
எந்தக் காலத்திலும்
அவன்
குடிசையோடு எரிந்ததாய்

குறிப்பேதும்
இல்லையே
ஆறாத காயங்களோடும்
முடியாத சோகங்களோடும்
நமக்கு வாழ்க்கை
பழகிப் போன
பொழுதொன்றில்
எல்லாம் முடிந்து
குடியரசு வந்தது.
எத்தனை முறை
சட்டை உரித்தாலும்
பாம்பு பாம்புதானே.
வயல்வெளிகளில்
கிடந்த பிள்ளை
வீட்டு முற்றத்தில்
ஆனா ஆவன்னா
எழுதிப் பழகியபோது
இறக்குமதி
செய்தார்கள்
மூலைக்கு மூலை
கான்வெண்டுகளை.
யுக இருட்டில்
உறங்கிக் கிடந்தவன்
கோட்டை நோக்கி
கேள்வி கேட்கும்பொழுது
தளர்த்தித் தளர்த்தி
தாராளமயமாக்கி விட்டார்கள்.
வெள்ளை மாளிகையின்
வெளிச்சம் பட்டு
இப்போது
பாராளுமன்றமே
பரலோக மன்றமாய்க்
காட்சியளிக்கிறது.
அங்கிருப்பவன்
ஒவ்வொருவனும்
ஒவ்வொரு
குப்பைத் தொட்டியோடு....
டெல்லி சுத்தமாக்கப்படுகிறதாம்
அப்படிப் பார்த்தால்
பாராளுமன்றத்தை அல்லவா
முதலில் வாரிக்
கொட்டிவிட வேண்டும்.
பண்ணையைக் கண்ட
கங்காணி பரபரப்பதுபோல
ஒவ்வொருவனும்
பரபரக்கிறானே
திறந்து கிடக்கிற
வீட்டில்
கொள்ளை போவது போல
ஒவ்வொன்றும்
கொள்ளை போகிறது.
என்ன செய்வதாய்
உத்தேசம்?

நன்றி, தோழர்களே!

*(2000 மார்ச் 19, சென்னை, சமூக நீதி எழுச்சி மாநாட்டில் வாசித்தது)*

**கவிஞர் பச்சியப்பன்**



படிப்பகம்

www.padippakam.com


# தமிழ்த் தேசம்

திருவள்ளுவர் ஆண்டு 2031 மேழம் - விடை
கி.பி. 2000 ஏப்ரல் - மே
கடல் : 3
அலை : 3

எல்லாத் தொடர்புகளுக்கும் :
தமிழ்த் தேசம்,
அறை எண் 3, முதல் மாடி,
242, என்.எஸ். கிருஷ்ணன் சாலை (ஆர்க்காடு சாலை),
வடபழனி, சென்னை - 600 026.

ஆசிரியர் : தியாகு • துணை ஆசிரியர் : தாம்பரம் தமிழ்மணி • வெளியிடுபவர் : ச. நாத்திக நந்தனார்


## ஓருயிரும்







## இழந்திடோம்!

இராசீவ் கொலை வழக்கில் தூக்குத் தண்டனை விதிக்கப் பெற்று சாக்கொட்டடிகளில் அடைக்கப்பட்டிருந்த நால்வரில் ஒருவருக்கு மரண தண்டனைக் குறைப்பு வழங்கப்பட்டுள்ளது. நளினியைத் தூக்குக் கயிற்றிலிருந்து விடுவிக்கப் பரிந்துரை செய்த தமிழக முதலமைச்சருக்கும் ஆணையிட்ட தமிழக ஆளுநருக்கும் நன்றி!

அதேபோது முருகன், பேரறிவாளன், சாந்தன் ஆகிய மூவரின் தண்டனைக் குறைப்பு விண்ணப்பங்கள் (கருணை மனுக்கள்) ஏற்கப்படவில்லை என்பது ஏமாற்றமும் வருத்தமும் அளிக்கிறது. அதிலும் குறிப்பாக தமிழக முதலமைச்சர் திரு. மு. கருணாநிதி சென்ற 26-10-99இல் செய்தியாளர்களைச் சந்தித்தபோது தெரிவித்த தெளிவான, திட்டவட்டமான கருத்துக்கு இம்முடிவு மாறாக உள்ளது. அப்போது அவர் இராஜீவ் வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டவர்களுக்கு தூக்குத் தண்டனை தேவையற்றது என்று கூறியதோடு, பொதுவாகவே தூக்குத் தண்டனை தேவையற்றது என்றும் கூறியிருந்தார். உலகளவில் இக்கருத்து நிலவி வருவதாகவும் சொன்னார். இந்தச் செய்தி 'முரசொலி' உட்பட எல்லா ஏடுகளிலும் வெளிவந்தது. நாமும் அவருக்கு நன்றி தெரிவித்தோம் ('தமிழ்த் தேசம்', அக்டோபர் 1999)

காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தியும் இந்த வழக்கில் மரண தண்டனை பெற்றுள்ள எவர் ஒருவரையும் தூக்கிலிடுவதை தானும் மகன் ராகுல், மகள் பிரியங்காவும் விரும்பவில்லை என்று தெளிவுபடுத்தியிருந்தார்.

தமிழக முதல்வரும் ஆளுநரும் சோனியா காந்தியின் இந்தக் கருத்தைக் கணக்கில் கொள்ளவில்லையா? அல்லது திண்டிவனம் ராமமூர்த்தி போன்ற அர்ப்பர்கள் குறை கூறுவார்கள் என்ற அச்சமா? சோனியாவே சொன்ன பிறகு திண்டிவனம் முண்டுவதுதானா பெரிது?

நளினிக்கான தண்டனைக் குறைப்பை கொச்சைப்படுத்திப் பேசும் கூலி அரசியல்வாதிகளுக்கு விடை சொல்லும்போது வழக்கில் நளினியின் பங்கு தொடர்பாக உச்சநீதி மன்ற நீதிபதி தாமஸ் கூறிய



படிப்பகம்

www.padippakam.com

கருத்துக்களை தமிழக முதல்வர் பொருத்த மாகவே எடுத்துக்காட்டியிருக்கிறார். இந்த வழக்கிற்குக் காரணமாய் அமைந்த குற்ற நிகழ்வில் நளினி வகித்த பங்கென்பது பிறருக்குக் கீழ்படிந்து செயல்பட்டதுதானே தவிர, மேலாதிக்கமான பங்கு அன்று என்று நீதிபதி சொல்லியிருக்கிறார்.

அரசு தரப்பு வழக்கில் அளிக்கப்பட்ட சான்றுகள் அனைத்தையும் உண்மையெனக் கொண்டால் நளினி வகித்த பங்குக்கும் ஏனைய மூவர் வகித்த பங்குக்கும் அடிப்படையான வேறுபாடு எதுவுமில்லை. நால்வருமே கீழ்ப்படிந்துதான் செயல்பட்டிருக்கிறார்கள். நளினியின் பங்கைப் போலவே ஏனைய மூவரின் பங்கும்கூட மேலாதிக்கமானதன்று. அப்படி மேலாதிக்கமான பங்கை வகித்ததாகச் சொல்லப் படும் சிவராசன், தனு, சுபா முதலானவர்கள் உயிருடன் பிடிபடவில்லை என்பதற்காக கீழ்ப்படிதலான பங்கு வகித்த மூவரை அதிகபட்ச தண்டனைக்குள்ளாக்குவது நீதி ஆகாது.

கொலையுண்டவர் இராசீவ் காந்தி என்பதாலேயே மூன்று பேரைத் தூக்கிலிட்டுப் பார்க்க அரசு விரும்புகிறதோ என்ற ஐயப் பாட்டுக்கு இடந்தரலாகாது.

தடா நீதிமன்றம் ஒட்டுமொத்தமாக 26 பேருக்கு மரணதண்டனை விதித்தது. '26 தமிழர் உயிர் காப்பு வழக்கு நிதிக்குழு' அமைத்து தமிழ் மக்களிடம் நிதி சேர்த்து உச்ச நீதிமன்றத்தில் வழக்காடி 22 உயிர்களை மீட்டு வந்தோம். (19 பேர் விடுதலை, மூவருக்கு ஆயுட் சிறை)

இப்போது நளினியைக் காப்பாற்றி விட்டோம்! ஆனால் இன்னும் நாம் வெற்றி பெறவில்லை. இந்த வழக்கில் ஒரே ஒருவர் தூக்கிலிடப்பட்டாலும் நமக்குத் தோல்வியே! ஒருயிரும் இழந்திட ஒருநாளும் ஒப்பிடோம்!

முருகன், சாந்தன், அறிவு மூன்று தமிழர் உயிர் காப்போம்! இதனை தமிழ் மக்களின் முழக்கமாக மாற்றுவோம்! மனித உரிமை அமைப்புகளின் துணையோடு வெற்றி பெற்றுக் காட்டுவோம்!

# சாலினியார் மறைவு



அறிவியக்கப் பேரவை கண்ட சாலை இளந்திரயனாரின் வாழ்க்கைத் துணைவியாரும் சிறந்த தமிழறிஞருமாகிய சாலினி இளந்திரயன் (அகவை 66) சென்ற ஏப்ரல் 28ஆம் நாள் தில்லியில் சாலை விபத்தில் காலமானார்.

தமிழ் மைய ஆட்சி மொழி - செவ்வியல் மொழி செயலாக்கக் குழுவின் தலைவராக இருந்தார். அக்குழு தில்லியில் நடத்தவிருந்த மாநாட்டுக்காகவே அவர் தில்லி சென்றிருந்தார்.

தமிழ் மொழி, இன நலன் காக்கும் போராளியாகவே இறுதி வரை விளங்கிய சாலினியார் மறைவு தமிழ் மக்களுக்குப் பேரிழப்பாகும்.

சாலினியாரின் மறைவுக் குத் 'தமிழ்த் தேசம்' தன் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது.



*2000 சனவரி 11ஆம் நாள் மரண தண்டனையை எதிர்த்து நடைபெற்ற மனிதச் சங்கிலிப் போராட்டத்தில் சாலினியார்* ➡




படிப்பகம்

www.padippakam.com

# அகலத் திறந்த ஆனையிறவு: பாயாமல் வென்ற புலிகள்!





ஏப்ரல் 22 - லெனின் பிறந்த நாள்! ஆனையிறவு திறந்த நாள் என்றும் இனி உலக வரலாறு கொண்டாடும். ஆனையிறவு என்றால் யானை நடக்கும் பாதை என்று பொருள். வன்னிப் பெரு நிலத்தை யாழ்குடா நாட்டுடன் இணைக்கும் பாதைக்குத்தான் ஆனையிறவு என்று பெயர்.

1958 ஆம் ஆண்டு தமிழீழத்தில் மொழிப்போர் மூண்டெழுந்தது. சிங்களம் ஒன்றுதான்' ஆட்சி மொழி என்று கூறும் சட்டத்தை எதிர்த்து தமிழீழம் எங்கும் மக்கள் போராடினார்கள். இந்த மொழிப் போராட்டப் புயல் யாழ்ப்பாணத்தில் மையம் கொண்டிருந்தது. போராடும் மக்களை அடக்கி ஒடுக்க சிங்களப் பேரினவாத அரசு இராணுவத்தைப் பயன்படுத்தியது. அப்போதுதான் முதன்முதலாக ஆனையிறவில் ஒரு சிறு படையணி நிறுத்தி வைக்கப்பட்டது.

இன ஒடுக்குமுறை வளரவளர தமிழின உரிமைப் போராட்டமும் வளர்ந்து சென்று தேசிய விடுதலைப் போராட்டமாகப் பரிணமித்தது. இதற்கு இணையாக நாடெங்கும் சிங்கள அரச இராணுவ முகாம்களை அமைத்து வலுப்படுத்தியது.

70களின் இரண்டாம் பாதியில் தமிழீழத் தனியரசுக்கான போராட்டம் தொடங்கி விட்டது. 1977ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் தமிழீழத் தனியரசுக்கான ஜனநாயகக் கட்டளையை மக்கள் வழங்கினார்கள். தமிழீழ விடுதலைப் புலிகள் உள்ளிட்ட போராளிக் குழுக்கள் தேசிய விடுதலைக் கான ஆயுதப் போராட்டத்தில் குதித்தன.

1983ஆம் ஆண்டு அரச பயங்கரவாதம் ஏவி விடப்பட்டு இனப் படுகொலை நிகழ்த்தப்பட்டது. வெளிக்கடை சிறைக்குள்ளேயே கோரப் படுகொலைகள் நிகழ்ந்தன. தமிழீழ மக்களின் முன்னிருந்த அமைதிப் போராட்ட வழிகள் அனைத்தும் அடைக்கப்பட்டுவிட்டன. ஆயுதப் போராட்டம் தவிர வேறு வழியில்லை என்ற நிலையில் போராளிக் குழுக்களே விடுதலை இயக்கங்களாக வளர்ந்து மக்களைக் காக்கும் பொறுப்பை ஏற்றன. இந்த இயக்கங்களில் முதன்மையானது தம்பி பிரபாகரன் தலைமையிலான தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு.

1984ஆம் ஆண்டிலேயே யாழ்ப்பாணம் மாவட்டத்தை அரசுப் பிடியிலிருந்து மீட்பதில் வெற்றி கண்டது தளபதி கிட்டுவின் தலைமையிலான புலிப்படை. இராணுவம் ஆனையிறவு, யாழ் கோட்டை, பலாலி உள்ளிட்ட முகாம்களில் முடக்கப் பட்டது. விடுதலைப் புலிகளை அழிப்பதன் மூலம் தேசிய இனச் சிக்கலுக்கு இராணுவத் தீர்வு காண முடியும் என்று மனப்பால் குடித்த சிங்கள அரசு மென்மேலும் படைகளைக் குவித்து இராணுவ முகாம்களை வலுப்படுத்தியது.

இந்தக் காலகட்டத்தில்தான் ஆனையிறவு இராணுவ முகாம் இலங்கையிலேயே மிகப் பெரிய இராணுவப் பாசறையாக வளர்க்கப்பட்டது. பெருந் தொகையான படையாட்களும் நவீனப் படைக்கலன் களும் கொண்டு வந்து குவிக்கப்பட்டதோடு, வலுவான பதுங்கு குழிகளும், பாதுகாப்பு அரண்களும் அமைக்கப்பட்டு, ஆனையிறவுத் தளம் எதிரிப் படையால் ஊடுருவ முடியாத கோட்டை நிகர்த்த ஒன்றாயிற்று.

1987 சூலையில் அமைதிப்படை என்ற பெயரால் கொண்டு வந்து இறக்கப்பட்ட இந்திய ஆக்கிரமிப்புப் படை வாரக் கணக்கில் போர் புரிந்து கடுஞ் சேதங்களை சந்தித்த பிறகுதான் யாழ்ப்பாணத்தை புலிப் படையிடமிருந்து கைப்பற்ற முடிந்தது. ராஜீவ் - ஜெயவர்த்தனா சதி உடன்படிக்கையும், இந்தியப் படையெடுப்பும் ஏற்படுத்திய ஒரு விளைவு என்னவென்றால், புலிப்படை தவிர ஏனைய அமைப்புகள் களத்திலிருந்து காணாமற் போயின, அல்லது பகைவனின் கையாட்களாகவும், தலை யாட்டிகளாகவும் களத்திற்கு வந்தன. அசைக்க முடியாத இலட்சிய உறுதியினாலும், ஒரு போதும் கலங்கவே கலங்காத அரசியல் தெளிவினாலும் ஈடற்ற வீர அர்ப்பணிப்பினாலும் மாற்றாரும் போற்றும்படி யான போர்த் திறனாலும் அளவிடற்கரிய அருந் தியாகத்தாலும் பிரபாகரனின் தலைமையிலான புலிப்படை தமிழீழ மக்களின் ஒரே தேசிய விடுதலை இயக்கமாக மலர்ந்தது.



படிப்பகம்

www.padippakam.com

1990 இந்தியப் படை வெளியேறிய பிறகு யாழ்ப்பாணம் முழுவதும் புலிகளின் கட்டுப் பாட்டுக்கு மீண்டது. அதிபர் பிரேமதாசாவுடன் நடைபெற்ற பேச்சுவார்த்தை தோல்வியுற்று இரண்டாம் ஈழப்போர் மூண்டபோது ஏராளமான சிங்களப்படை முகாம்களை புலிப்படை முற்றுகை யிட்டு அழித்தது. யாழ் கோட்டையைக் கைப்பற்றி புலிக் கொடியை ஏற்றி திலீபனின் கனவை நனவாக்கிற்று. 'தவளைப் பாய்ச்சல்' என்று பெயரிடப்பட்ட தாக்குதலில் பூநகரி முகாமைக் கைப்பற்றியது என்றாலும் ஆனையிறவை மட்டும் புலிப்படையால் ஒன்றும் செய்ய முடியவில்லை. தமிழீழத் தேசத்தின் நெஞ்சில் தெய்த்த முள்ளாகவே அது இருந்து வந்தது. இந்த முள்ளைப் பிடுங்கி எறியும் முதல் முயற்சி 1991இல் நடைபெற்றது. புலிப்படை ஆனையிறவு முகாமை முற்றுமாக முற்றுகையிட்டது. எப்பாடுபட்டும் முற்றுகையை உடைப்பதில் பகைவன் குறியாக இருந்தான். புதிய படைகளையும் கருவிகளையும் கடல் வழியாகக் கொண்டு வந்து வெற்றிலைக் கேணியில் கரை யேறச் செய்து அங்கிருந்து ஆனையிறவுக்கு வழி ஏற்படுத்து வதன் மூலம் அவன் வெற்றி கண்டான். கிட்டத்தட்ட 600 புலிகள் இந்தப் போரில் உயிரிழந் தார்கள். 1000 பேருக்கு மேல் காயமுற்றார்கள். பிறகு வந்த எட்டு ஆண்டு காலத்தில் புலிப்படை எத்தனையோ பிரமிக்கத்தக்க வெற்றி களைப் பெற்ற போதும் ஆனையிறவு மட்டும் எட்டாக் கனியாகவே இருந்து வந்தது.




1995இல் அதிபர் சந்திரிகா பெரும் சிங்களப் படையை ஏவி யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றினார். சாமானியப் பொதுமக்களுக்கு ஏற்படக்கூடிய பேரிழப்பைக் கருத்தில் கொண்டு புலிகள் யாழ்ப்பாணத்திலிருந்து வன்னிக் காட்டுக்குப் பின் வாங்கினார்கள். மக்களும் அவர்களோடு சேர்ந்து வெளியேறிச் சென்றார்கள். கடந்த ஐந்து ஆண்டு களாக யாழ்ப்பாணத்தை ஆக்கிரமித்திருந்த சிங்களப் படை தன் கட்டுப்பாட்டைத் தக்க வைத்துக் கொள்வதற்கு ஆனையிறவை பெரிதும் நம்பியிருந் தது. ஆனையிறவு வீழ்ந்தால் யாழ்ப்பாணத்தின் நுழைவாயில் அகலத் திறக்கும் என்பது புலிகளுக்கும் அதேபோல் பகைவனுக்கும் தெரியும்.

1996இல் 'ஓயாத அலைகள் - ஒன்று' எனப் பெயரிடப்பட்ட தாக்குதல் நடவடிக்கையில் முல்லைத் தீவு இராணுவ முகாமை புலிப்படை கைப்பற்றியது. நூற்றுக்கணக்கான சிங்களப் படையினர் கொல்லப் பட்டதோடு, தொலைதூரப் பீரங்கிகள் உள்ளிட்ட நவீனப் படைக்கலன்கள் பலவும் புலிகள் வசமாயின.

வவுனியாவிலிருந்து வன்னிப் பெருநிலம் வழியாக யாழ்ப்பாணத்திற்கு பாதை திறக்க ஜெயசிக்குறுய் (வெற்றி நிச்சயம் என்று பொருளாம்) என்ற பெயரில் சிங்களப் படை மேற்கொண்ட படையெடுப்பு ஈராண்டு காலத்துக்கு மேல் நத்தை வேகத்தில் நகர்ந்து, புலிகளின் எதிர்ப்புக்கு ஈடு கொடுக்க முடியாமல் கைவிடப்பட்டது. இந்தப் போரினால் ஏராளமான நவீன ஆயுதங்கள் (குறிப்பாக பீரங்கிகள், தாங்கிகள், கவச ஊர்திகள்) புலிகளுக்குக் கிடைத்து விட்டன என்பதோடு, புலிப்படையும் கெரில்லாப்படை என்ற நிலையிலிருந்து படிமலர்ச்சி கண்டு மரபுவழி இராணுவமாக வளர்ந்து விட்டது.

புலிகளின் தரைப்படை போலவே கடற்படையும் (கடற்புலிகள்) வலிமை மிக்கது. பகைவன் அஞ்சி நடுங்கும்படியான போர்த்திறன் கொண்டது. போர்க்கலையில் பேரதிசயமாக மதிக்கப்படும் கரும்புலிகளைப் பற்றிச் சொல்லவே வேண்டாம்.



1999இல் 'ஓயாத அலைகள் - இரண்டு' என்று பெயரிடப்பட்ட தாக்குதல் நடவடிக்கையில் புலிப்படை கிளிநொச்சியைக் கைப்பற்றியது.

சென்ற ஆண்டின் இறுதிப் பகுதியில் 'ஓயாத அலைகள் - மூன்று' என்று பெயரிடப்பட்ட தாக்குதல் நடவடிக்கையை புலிகள் தொடங்கினார்கள். பல செய்தி ஏடுகள் கூறியதுபோல வன்னிப் பெரு நிலத்தில் ஈராண்டுகளில் இழந்த நிலப்பரப்பை ஒரு வார காலத்திற்குள் புலிகள் மீட்டுக் கொண்டதோடு வவுனியா நகரத்து வாசல்வரை முன்னேறிச் சென்றார்கள். சிங்களப் படை போட்டது போட்டபடி பின்னங்கால் பிடரியில் அடிபட ஓட்டமெடுத்த காட்சியை உலகமே கண்டு நகைத்தது. சந்திரிகாவும் இராணுவ அமைச்சர் ரத்தவத்தையும் மட்டும் மற்றவர்களை ஏமாற்றியதோடு தங்களைத் தாங்களே ஏமாற்றிக் கொள்ளவும் செய்தார்கள்.

புலிகள் யாழ்ப்பாணத்திற்குள் ஊடுருவி பல தாக்குதல்கள் நடத்தியதோடு பகைவனின் தலைநகரம் கொழும்புவிலும் அவனை நிம்மதியாகத் தூங்கவிட வில்லை. வினை விதைத்தவர்கள் வினை அறுக்கும் நிலை!



படிப்பகம்

www.padippakam.com

இத்தனைக்கும் இடையே ஆனையிறவு மட்டும் அசைந்தபாடில்லை. அப்படை முகாம் மேலும் வலுப்படுத்தப்பட்டது. பல்லாயிரம் படை வீரர்கள் அங்கு குவிக்கப்பட்டார்கள். இலங்கைப் படையிலேயே மிகச் சிறந்த பயிற்சி பெற்ற பிரிவாகிய 53ஆம் படைப்பிரிவு அங்கு கொண்டு போய் நிறுத்தப்பட்டது. அதற்குத் துணையாக 54ஆம் பிரிவும் 55ஆம் பிரிவின் ஒரு பட்டாளமும் இறக்கப்பட்டன.

'ஓயாத அலைகள் - மூன்றின்' இரண்டாவது கட்டத்தில் புலிகள் ஆனையிறவு பாசறையின் தெற்கு எல்லையில் உள்ள பரந்தன் வரை முன்னேறிச் சென்றார்கள். அப்போதிருந்தே ஆனையிறவின் வீழ்ச்சி எதிர்பார்க்கப்படலாயிற்று. ஆனால் சந்திரிகாவின் படைத் தளபதிகள் மட்டும் ஆனையிறவை அசைக்க முடியாதென்று மார்தட்டிக் கொண்டிருந்தார்கள்.

1999 திசம்பரில் புலிகள் வெற்றிலைக்கேணியைக் கைப்பற்றினார்கள். பிறகு ஆனையிறவைச் சுற்றிலும் அமைக்கப்பட்டிருந்த சிறுசிறு முகாம்களை ஒவ்வொன்றாக வீழ்த்தினார்கள். விடுதலைப் புலிகளின் பீரங்கிக் குண்டுகளின் தாக்குதல் இலக்கிற்குள் ஆனையிறவு வந்துவிட்டது.



அதேபோது யாழ்ப்பாணத்தின் தென்கிழக்கு முனையிலும் புலிப்படை விரைந்து முன்னேறியது. புலிகள் அடுத்து என்ன செய்வார்களோ என்று பகைவன் குழம்பிக் கிடந்தபோது அவர்கள் ஆனையிறவையும், யாழ்ப்பாணத்தையும் இணைக்கிற கிழக்குக் கடற்கரைச் சாலையைக் கைப்பற்றிக் கொண்டார்கள். இதனால் ஆனையிறவின் மீதான முற்றுகைமுழுமை அடைந்தது. புலிகள் எந்த நேரமும் ஆனையிறவின் மீது பாயக் கூடும் என்று பகைவன் எண்ணிக் கொண்டிருந்தான்.

புலிகள் அப்படிச் செய்திருந்தால் தோல்வி அடையக் கூடிய ஒரு வாய்ப்பும் இருந்தது. ஆனையிறவு அமைந்துள்ள நிலப்பரப்பின் இயல்பு (மலையோ காடோ இல்லாத திறந்த மணல்வெளி), பகைப்படையின் பெருந்தொகை, படைக் கருவிகளிலான ஏற்றத் தாழ்வு... முதலானவையே காரணம்.

புலிகள் ஆனையிறவைச் சுற்றிப் பதுங்கி இருந்தார்களே தவிர பாய்ந்தார்கள் இல்லை. தொலைவிலிருந்தபடி பீரங்கிகளை இயக்கி குண்டுமாரி பொழிந்து கொண்டிருந்தார்கள். ஆனையிறவு பெரும் பாசறையின் வடக்கு மூலையில் அமைந்த இயக்கச்சியைக் குறி வைத்துத் தாக்கினார்கள்.

## மீண்டும் கிட்டு!



1995இல் சிங்களப் படையினர் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றியபோது மாவீரர் கிட்டுவின் சிலையை உடைத்துக் கீழே தள்ளி வெறிக் கூத்தாடினார்கள்.

இன்று அதே கிட்டுவின் பெயரில் அமைந்த பீரங்கிப் படையணி அவர்களை ஓடஓடத் துரத்திக் கொண்டிருக்கிறது.

**ஏராளமான சிங்களப்படை முகாம்களை புலிப்படை முற்றுகையிட்டு அழித்தது. யாழ்கோட்டையைக் கைப்பற்றி புலிக் கொடியை ஏற்றி திலீபனின் கனவை நனவாக்கிற்று.**

யாரும் எதுவும் வெளியிலிருந்து உள்ளே வரவோ, உள்ளிருந்து வெளியே செல்லவோ வாய்ப்பில்லாமல் மூச்சுத் திணறியது ஆனையிறவு. சரணடைவதா, செத்து மடிவதா என்பதை முடிவு செய்ய வேண்டிய நிலை. தண்ணீரில் மூழ்கிக் கொண்டிருப்பவன் துரும்பைப் பிடிப்பது போல் இந்தக் கடைசிக் கட்டத்தில் படைத் தளபதியை மாற்றிப் போட்டார் சந்திரிகா.

நூற்றுக்கணக்கான உயிர்களை பலியிட்டபின் சென்ற ஏப்ரல் 22ஆம் நாள் ஆனையிறவை விட்டு சிங்களப் படை ஓட்டம் பிடித்தது. ஆனையிறவு முகாமை வெற்றிகரமாகக் கைப்பற்றியது புலிப்படை. தளபதி பானு ஏற்றிய புலிக்கொடி ஆனையிறவின் மீது மிடுக்குடன் பறந்து தமிழீழ விடுதலைப் போர்க்களத்தில் வித்துக்களாய் வீழ்ந்த மாவீரர்களுக்கு வீர வணக்கம் செலுத்திக் கொண்டிருக்கிறது.

புலிப்படை மெய்யாகவே ஒரு மக்கள் படையாக வளர்ந்திருப்பதை ஆனையிறவு வெற்றி உலகிற்கு பறைசாற்றுகிறது. யாழ்ப்பாணத்திற்குள் அப்படை விரைந்து முன்னேறிக் கொண்டிருக்கிறது.

தென் திசை விடியலுக்குக் கட்டியம் கூறி நிற்கும் ஆனையிறவு வெற்றிக்கு விடுதலைப் போர்களின் வரலாற்றில் என்றுமழியா இடமுண்டு. ●



படிப்பகம்

www.padippakam.com

# சென்னையில் சமூக நீதி எழுச்சி மாநாடு




தமிழ் தமிழர் இயக்கம் கூட்டிய சமூக நீதி எழுச்சி மாநாடு சென்னை அயனாவரம் காமராசர் மாளிகையில் 2000 மார்ச் 19 ஞாயிறு காலை 10 மணியளவில் கூடியது. இயக்கத்தின் காஞ்சி மாவட்டச் செயலாளர் தோழர் தாம்பரம் தமிழ்மணி வரவேற்புரை ஆற்றினார். கருத்தரங்கத்திற்கு தலைமை வகித்துத் தோழர் தியாகு 'சமூக நீதிப் போராட்டம்' என்ற தலைப்பில் உரையாற்றினார். தோழர் வே. ஆனைமுத்து 'சமூக நீதிப் போராட்டமும், மண்டல் அறிக்கையும்' என்ற தலைப்பிலும், தோழர் இராசேந்திர சோழன் 'பொருளியல் துறையில் சமூக நீதிப் போராட்டம்'என்ற தலைப்பிலும், பேராசிரியர் சரசுவதி 'சமூக நீதிப் போராட்டமும் பெண்ணுரிமை இயக்கங்களும்' என்ற தலைப்பிலும் உரையாற்றினார்கள்.

நடுப்பகல் உணவு இடைவேளையின்போது த.த.இ. கலைக்குழுவைச் சேர்ந்த தோழர்கள் தமிழரசன், குமார், அன்பு தென்னரசன் ஆகியோர் இயக்கப் பாடல்கள் பாடினர். பிற்பகல் நடைபெற்ற கவியரங்கத்தில் கவிஞர் பச்சியப்பன் தலைமையில் தாயப்பன், வவுனியன், கடற்கரை, பெரியார் பேரன் ஆகிய கவிஞர்கள் 'நிகரென்று கொட்டு முரசே!' என்ற தலைப்பில் கவிதை படித்தார்கள்.

த.த.இ. பொருளாளர் தோழர் க. தேவேந்திரனும், வத்திராயிருப்பைச் சேர்ந்த தோழர் குறிஞ்சிக் கபிலனும் தீர்மானங்களை முன்மொழிந்து உரையாற்றினார்கள்.

மாலையில் தோழர் சுப. வீரபாண்டியன் தலைமையில் நடைபெற்ற வாழ்த்தரங்கத்தில் பழ. நெடுமாறன் (தமிழர் தேசிய இயக்கம்), விடுதலை இராசேந்திரன் (பெரியார் திராவிடர் கழகம்), அரங்க. குணசேகரன் (தமிழக மனித உரிமை இயக்கம்), இளங்கோ (தமிழக ஒடுக்கப்பட்டோர் விடுதலை இயக்கம்), சா. சந்திரசேகரன் (தமிழ்நாடு உணவு தானிய வியாபாரிகள் சங்கம்) ஆகியோர் உரையாற்றினார்கள்.

நிறைவாக இரவு 7.00 மணியளவில் 'முன்னாளில் ஒரு முதல்வன்' நாடகம் அரங்கேற்றப்பட்டது. நாடகத்தை எழுதியவர் பேராசிரியர் மருதமுத்து. இயக்கியவர் அன்பு தென்னரசன். நடித்தவர்கள் த.த.இ. கலைக்குழுவைச் சேர்ந்த தோழர்கள் குமார், அன்பு தென்னரசன், வெங்கடேசன், சிவ.காளிதாசன், பாவெல், தமிழரசன், செந்தில், தமிழரசி முதலானோர். சென்னை மாநகரச் செயலாளர் தோழர் தமிழன்பன் நன்றியுரையாற்றினார்.

இயக்கத் தோழர்களும், ஆதரவாளர்களும் சமூக நீதிப் பற்றாளர்களும் பொதுமக்களுமாக சுமார் ஆயிரம் பேர் கலந்து கொண்ட சமூக நீதி எழுச்சி மாநாடு சமூக நீதிச் சிக்கல்கள் குறித்த விழிப்புணர்வை தோற்றுவிக்கிற வகையிலும், சமூக நீதிப் போராட்டப் பாதையில் வெளிச்சம் பாய்ச்சுகிற வகையிலும் பயன்மிக்கதாக அமைந்தது.





படிப்பகம்

www.padippakam.com

(சமூக நீதி எழுச்சி மாநாட்டின் கருத்தரங்க உரைகளிலிருந்து ...

# "சமூக நீதிக் காவலர்கள் என்ன செய்கிறார்கள்?"



**தியாகு**

பிற்படுத்தப்பட்டவர்கள், தாழ்த்தப்பட்டவர்கள் ஆகியோருக்கான இட ஒதுக்கீட்டிற்காகப் போராடி வரும் அதே வேளையில் நீதித் துறை, அறிவியல் துறை, படைத் துறை ஆகியவற்றிலும் இட ஒதுக்கீடு கேட்க வேண்டிய தேவை நியாயமாகவே எழுகிறது.

பிற்படுத்தப்பட்டோர், தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினருக்குப் பெரியார், அம்பேத்கர், முயற்சியினால் இட ஒதுக்கீடு வழங்கப்பட்ட போது இத்துறைகள் அதில் சேர்க்கப்படவில்லையே,. ஏன்?

தொடர்வண்டித் துறையில் மேலும் இட ஒதுக்கீடு வழங்குவது குறித்து ஒரு வழக்கு உச்ச நீதிமன்றத்தில் சில ஆண்டுகளுக்கு முன்பு நடந்தது. தொடர் வண்டித் துறையில் மேலும் இட ஒதுக்கீடு கொடுத்தால், தொடர் வண்டி விபத்துகள் அதிகரிக்கும் என சாந்தி பூஷன் வாதாடினார். அத் துறையில் காலி இடங்கள் இருந்தால் அது அடுத்த ஆண்டுக்கு ஒத்திச் சேர்த்தல் முறைப்படி எடுத்துச் செல்லப்பட வேண்டும் என்பதை எதிர்த்து வாதாடினார்.

இதற்கு நீதிபதி கிருஷ்ணய்யர் விடையளித்தார்: ''நாங்கள் கறுப்பு அங்கி உடுத்திய ஏமாளிகள் அல்ல. இந்த மிரட்டல்களுக்கு நாங்கள் அஞ்ச மாட்டோம்''

தொடக்கத்திலேயே தொடர் வண்டித் துறை போன்றவற்றில் இட ஒதுக்கீடு செய்த போது நீதி, அறிவியல், படைத் துறைகளில் ஏன் இட ஒதுக்கீடு' செய்யப்படவில்லை? தொடர்வண்டி விபத்து நேர்ந்து விடும் எனும் வாதத்தைப்போல், அறிவியல் கண்டுபிடிப்புகள் பாதிக்கப்படும் என்பதாலோ அல்லது நீதியின் செங்கோல் சாய்ந்து விடும் என்பதாலோ அல்லது படையினரின் தரம் குன்றும் என்பதாலோ அந்தந்தத் துறைகளில் இட ஒதுக்கீடு மறுக்கப்படவில்லை. இதற்கு அன்றைக்குத் தரப்பட்ட விளக்கம் என்னவென்றால் இட ஒதுக்கீடு இப்போது தரப்படுமேயானால் அதை நிரப்ப ஆட்கள் கிடைக்க மாட்டார்கள். அதனால் இப்போதைக்கு அது வேண்டாம் என்பதுதான்.

இப்போதுள்ள இட ஒதுக்கீடு தொடங்கி ஐம்பது ஆண்டுகள் கழிந்துவிட்டன. இந்த ஐம்பது ஆண்டுகளில் உயர் கல்வித் துறையில் இட ஒதுக்கீடு வழங்கப்பட்டிருக்கிறது. நான் குறிப்பிட்டிருக்கிற மூன்று துறைகளைத் தவிர மற்ற எல்லாத் துறைகளிலும் இட ஒதுக்கீடு செயல்படுத்தப்பட்டிருக்கிறது. ஏனைய பிற்படுத்தப்பட்டவர்கள் மற்றும் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு தில்லி அரசில் இட ஒதுக்கீடு இல்லை. ஆனால் தாழ்த்தப்பட்டவர்கள் மற்றும் பழங்குடியினருக்கு இட ஒதுக்கீடு செயல்படுத்தப்பட்டிருக்கிறது. இதன் விளைவாக சாதி ஒழிந்து விட வில்லை. ஆனால் ஒவ்வொரு துறையிலும் நிலவி வந்த ஒரு - சாதி ஆதிக்கம் கலைந்திருக்கிறது, குறைந்திருக்கிறது. இன்றைக்கு அவர்களுள் சிலர் அறிவியல் படித்திருக்கிறார்கள். சட்டக் கல்வி படித்திருக்கிறார்கள். எனவே நீதி, அறிவியல், படைத் துறைகளில் இப்பொழுது அவர்களுக்கு இட ஒதுக்கீடு தேவை.

தகுதி திறமையைச் சொல்லி பார்ப்பனர்கள், பார்ப்பனீயச் சக்திகள் இட ஒதுக்கீட்டை எதிர்த்துப் பரப்புரை செய்கிறார்கள். உண்மையில் ஒரு சமூகம் தன்னிடமுள்ள தகுதி, திறமை, ஆற்றல்களை முழு அளவில் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமானால் எல்லாப் பகுதி மக்களிடமிருந்தும் அறிவாளர்களை, ஆற்றலாளர்களை ஈர்த்திட வேண்டும். சரியாகச் சொன்னால், தகுதி, திறமையைக் காக்க இட ஒதுக்கீடுதான் ஒரே வழி. வேறு வழியில்லை.

எடுத்துக்காட்டாய் ஒன்று சொல்லலாம். தமிழ்நாட்டளவில் ஒரு கபடிக் குழுவைத் தேர்ந்தெடுப்பதாகவும், மதுரை மாவட்ட அளவில் மற்றொரு கபடிக் குழுவைத் தேர்ந்தெடுப்பதாகவும் கொள்வோம். இயல்பாக இவ்விரு குழுக்களில் எது திறமையான குழுவாக இருக்கும்? தமிழ்நாடு குழுதான் திறமையான குழுவாக இருக்கும். சில லட்சம் மக்களிடமிருந்து எடுக்கப்பட்ட

## தமிழகத்திற்குத் தனி அரசமைப்பு

"இந்திய அரசமைப்பை மறு ஆய்வு செய்யப் போகிறார்களாம். எந்த ஒன்றையும் மறு ஆய்வு செய்வதில் தவறில்லை. ஆனால் மறு ஆய்வுக்காரர்கள் மறந்துவிடக் கூடாத ஒரு செய்தி. இந்திய அரசமைப்பை தமிழ்த் தேசம் ஒரு நாளும் ஏற்றுக் கொண்டதில்லை. இது குறித்துத் தமிழகத்தோடு தில்லிக்கு முறையான ஒப்பந்தம் எதுவுமில்லை. நம் மீது திணிக்கப்பட்ட இந்த அரசமைப்பினால் இந்த ஐம்பதாண்டுக் காலத்தில் நமக்கு எந்த நன்மையும் இல்லை. கேடுகளே விளைந்துள்ளன. இந்த அரசமைப்பு நம் குழந்தைகளுக்கு அனைத்து நிலைகளிலும் அனைத்துக் கல்வியும் தாய்த் தமிழ் வழியாகக் கிடைப்பதை ஏற்றுக் கொள்ளவில்லை. அதற்கு வழி வகை செய்யவில்லை. நம் ஏழ்மையை இது போக்கவில்லை. உழவர்களின் நிலப்பசியைத் தணிக்கவில்லை. அனைத்துக்கும் மேலாக இது சமூக நீதிக்கு எதிரான அரசமைப்பு. இந்த அரசமைப்பு நமக்குத் தேவையில்லை. நமக்குத் தமிழ்நாட்டுக்கென்று தனி அரசமைப்புத் தேவை. சமூக நீதியை, அதாவது மனித உரிமைகளையும், சனநாயகத்தையும் அடிப்படையாகக் கொண்ட தமிழக அரசமைப்பு நமக்கு வேண்டும். மறு ஆய்வுக்காரர்கள் இதை ஏற்றுக் கொள்வார்களா?



படிப்பகம்

www.padippakam.com

குழுவை விட தமிழ்நாடு முழுவதிலுமிருந்து எடுக்கப்பட்ட குழுவில்தான் கூடுதல் தகுதி, திறமை படைத்தவர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான வாய்ப்புகள் அதிகம்.

இதே போல் எல்லா உயர் கல்வியையும், எல்லாப் பதவிகளையும் ஆக்கிரமித்துக் கொண்டிருப்பவர்களும் தகுதி, திறமை பேசுபவர்களுமான 3 விழுக்காடாய் இருக்கும் பார்ப்பனர்கள்,10 விழுக்காடாய் இருக்கும் உயர்சாதியினரிடமிருந்து தேர்ந்தெடுக்கப்படுவதைக் காட்டிலும் 100 விழுக்காடு மக்களிடமிருந்து தேர்ந்தெடுக்கப்படும் பொழுது தகுதி, திறமை கூடுமே தவிர குறையாது. எனவே, தகுதி, திறமை வேண்டுமானால் இட ஒதுக்கீடு வேண்டும்.

நான் முதலில் சொன்னபடி நீதி, அறிவியல், படைத் துறையில் இட ஒதுக்கீடு கொடுத்தால் தரம் குன்றி விடும் என்பதால் இட ஒதுக்கீடு மறுக்கப்படவில்லை. அவ்விடங்களை நிரப்ப அன்றைக்கு இல்லாத ஆட்கள் இன்றைக்கு இருக்கிறார்கள். எனவே, இத் துறைகளில் இன்றிலிருந்து இட ஒதுக்கீட்டை ஆரம்பித்து விடலாம்.

இது அட்டவணைச் சாதியினர், மற்றும் அட்டவணைப் பழங்குடியினருக்கான தேசிய ஆணையத்தின் பரிந்துரை. இதை மறுத்திருப்பது யார்? மைய அரசின் சமூக நீதித் துறை. அத் துறைதான் இப்பரிந்துரையை மறுத்திருக்கிறது. இதுவா சமூக நீதித் துறை?

இதுவல்லவா சமூக அநீதித் துறை? மைய அரசில் உள்ள நமது 'சமூக நீதிக் காவலர்கள்' என்ன செய்து கொண்டிருக்கிறார்கள்? என்ன எதிர்ப்பைத் தெரிவித்திருக்கிறார்கள்?

அமெரிக்காவில் அரிசோனா பல்கலைக் கழகத்தில் ஒரு மாணவர் என்னிடம் ஒரு கேள்வி கேட்டார். ''அய்யா, எந்த நாட்டில் சாதி அடிப்படையில் இட ஒதுக்கீடு இருக்கிறது?'' நான் சொன்னேன், ''உலகத்தில் எந்த நாட்டில் இட ஒதுக்கீட்டின் அடிப்படையிலான சாதி இருக்கிறதோ, அந்த நாட்டில்தான் சாதி அடிப்படையில் இட ஒதுக்கீடும் இருக்கும்.''

# இடஒதுக்கீட்டின் வரலாறு



**வே. ஆனைமுத்து**

நாம் இட ஒதுக்கீட்டுச் சிக்கல்களைப் புரிந்து கொள்வதற்கு இட ஒதுக்கீட்டின் வரலாற்றைத் தெளிவாகத் தெரிந்து கொள்ள வேண்டும். இவ்வரலாற்றை இரண்டு கட்டங்களாகப் பிரிக்கலாம். அதாவது 1950க்கு முன், பின் உள்ள இரு கட்டங்களாகப் பிரித்துக் கொள்ள வேண்டும்.

இந்திய அளவில் இட ஒதுக்கீடு என்ற கருத்துக்கு முன்னோடி மகாத்மா ஜோதிபா ஃபுலே அவர்கள்தான். தென்னகத்தைப் பொறுத்த வரை 1890 - 91இன் திராவிட மாகாண சபையை நிறுவியவரும் 1897இல் 'தமிழன்' என்கிற ஏட்டைத் தொடங்கியவருமான அயோத்திதாசப் பண்டிதர்தான் இட ஒதுக்கீட்டுக் கருத்துக்கு விதை போட்டவர். இதைத் தொடர்ந்து 1919இல் பெரியாருக்குக் காங்கிரசில் இக் கொள்கையைக் கொண்டு வர வேண்டும் என்று தோன்றியது.

இதற்கு இடையில் எங்கே இக் கொள்கை நடப்புக்கு வந்தது? எப்படி வந்தது? இந்திய அளவில் இக் கொள்கை முனைவர் அம்பேத்கரால் நடப்புக்கு வந்தது. 1902இல் மராத்தியப் பகுதியில் சுதேச சமஸ்தான இந்தியாவில் சிற்றரசராய் இருந்த சாகு மகாராஜா ஆட்சியின் கீழ் 60 பெரிய பதவிகள் இருந்தன. அந்த அறுபது பேருமே பார்ப்பனர்கள். இதைப் பெரிய அக்கிரமம் என்று உணர்ந்த அவ்வரசர் சூத்திரனுக்கும், ஆதி சூத்திரனுக்கும் வேலை கொடுக்க வேண்டும் எனச் சொல்லி ஆணை போட்டார். இதுதான் இந்திய வரலாற்றில் இட ஒதுக்கீட்டிற்கான முதல் ஆணை. அவரைத் தொடர்ந்து சில ஆண்டுகள் கழித்து பரோடா சிற்றரசர் இதைப் போன்ற ஆணையை வெளியிட்டார். இதைத் தொடர்ந்து மைசூர் சிற்றரசர் நான்காவது கிருஷ்ணராஜ உடையார் என்பவர் மில்லர் என்கிற நீதிபதி தலைமையில் குழு ஒன்று போட்டார். அது முதன்முதலில் ஒரு அறிக்கை கொடுத்தது. எந்த சாதியில் நூற்றுக்கு ஐந்து பேருக்குமேல் ஆங்கிலம் தெரியவில்லையோ அந்த சாதியெல்லாம் பிற்படுத்தப்பட்ட சாதிகள் என குறிப்பிட்டிருந்தனர். அவ்வறிக்கையை சிற்றரசர் ஏற்றுக் கொண்டார்.

அப்பொழுது பார்ப்பனர்கள், பார்ப்பனர் அல்லாத மேல் சாதி இந்துக்கள், பார்ப்பனர் அல்லாத பிற்படுத்தப்பட்ட இந்துக்கள், இஸ்லாமியர்கள், கிறித்துவர்கள், ஆங்கிலோ - இந்தியர்கள் என ஆறு வகுப்புகளாகப் பிரிக்கப்பட்டு இட ஒதுக்கீடு வழங்கப்பட்டது.

1906இல் , இந்தியாவிலுள்ள இஸ்லாமியர்கள் ஆகாகான் தலைமையில் சிம்லா சென்று வைசிராயை சந்தித்தார்கள். இந்தியாவில் நான்கில் ஒரு பங்கு இருக்கும் எங்களுக்கு சட்டமன்றத்திற்குள் நுழைய முடியவில்லை என்றும், அதற்கொரு வழி செய்யுமாறும் கோரிக்கை வைத்தனர். இதை எதிர்த்து முதலில் எழுதியவர் சுப்பிரமணிய பாரதியார். இது மிகப் பெரிய தேசத் துரோகம் என இந்தியா பத்திரிகையில் எழுதினார். அவர்களுக்கு 1909இல் இட ஒதுக்கீடு கொடுக்கப்பட்டது. அப்பொழுதிலிருந்து 1946வரை இந்த இட ஒதுக்கீடு தொடர்ந்தது. இந்த இட ஒதுக்கீடைக் கண்ட நம்மூர்த் தலைவர்களும் திராவிட இயக்க நிறுவனர்களுமான நாயர், தியாகராயர், டாக்டர் நடேச முதலியார் ஆகியோர் 1914இல் 97 விழுக்காடாய் உள்ள பார்ப்பனரல்லாதோருக்கு தனித் தொகுதி ஒதுக்கீடு கேட்டனர். இவ்வொதுக்கீட்டை வெள்ளையர்கள் 1919இல் கொடுத்தனர். இதனைப் பார்ப்பனர்களான சத்தியமூர்த்தி, இராஜாஜி, சீனிவாச ஐயங்கார்



படிப்பகம்

www.padippakam.com

ஆகியோர் கடுமையாக எதிர்த்தனர். 'இந்து', 'சுதேசமித்திரன்' ஏடுகளும் கடுமையாக எதிர்த்தன. இந்த இட ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகுதிகளுக்கு முகமதியர் அல்லாதார் தொகுதி என்று பெயர். இந்தத் தொகுதிகளில் தான் பல பார்ப்பனர் அல்லாதோர் நீதிக் கட்சி சார்பில் வெற்றி பெற்றனர். அவர்கள் 1925இல் பதவிக்கு வந்தனர். தொடர்ந்து 1937 வரைக்கும் ஆண்டனர்.

இந்தப் பகுதியில் வேலையில் இட ஒதுக்கீட்டிற்கான ஆணை 1921இல் வெளியிடப்பட்டது. இது 1927இல் நடைமுறைக்கு வந்தது. இது வரையில் கூட வடக்கே எந்தவிதமான மாற்றமும் வரவில்லை. இந்தியாவிலேயே பார்ப்பனர் அல்லாதோருக்கு இட ஒதுக்கீடு கொடுக்கப்பட்டது என்பது சென்னை மாநிலத்தில் மட்டும்தான்.

1906இல் இஸ்லாமியர்கள், சீக்கியர்கள், பார்சிகள், ஜைனர்கள் வேலையில் இட ஒதுக்கீடு கேட்டனர். வெள்ளை மைய அரசின் எல்லாத் துறைகளிலும் இஸ்லாமியர்களுக்கு 25 விழுக்காடும், சீக்கியர்கள், பார்சிகள், ஜைனர்கள் போன்ற சிறுபான்மையினருக்கு 8.3 விழுக்காடும் கொடுக்கப்பட்டது.

இது 1934இல் கொடுக்கப்பட்டது. 1935இல் நடைமுறைக்கு வந்தது. அப்பொழுதும் மாநில அரசுகளில் வரவில்லை.

இதைக் கண்ட நீதிக் கட்சி ஆட்சியைச் சேர்ந்த பொப்பிலி ராசா அவர்கள் ராமசாமி முதலியாரை தில்லிக்கு அனுப்பினார். அங்கு சென்று அவர் சென்னை மாநில எல்லைக்குள் மைய அரசு வேலைகளில் பார்ப்பனர் அல்லாதாருக்கான இட ஒதுக்கீட்டைச் செயல்படுத்த அதிகாரம் கோரினார். இக்கோரிக்கை 1934இல் வைக்கப்பட்டது. கோரிக்கை வைத்தும்கூட ஓராண்டுக்கு இழுத்தடிக்கப்பட்டது. அப்பொழுதெல்லாம் அங்கு செயலர்களாகவும், துணைச் செயலர்களாகவும் இருந்தவர்கள் தென்னாட்டுப் பார்ப்பனர்கள். இதனை அவர்கள் கடுமையாக எதிர்த்தனர். பிற்படுத்தப்பட்டோருக்கு வேலைகளில் இட ஒதுக்கீடு கொடுத்தால் பிறகு தாழ்த்தப்பட்டோரும், பழங்குடியினரும் அவர்களுக்கான இட ஒதுக்கீட்டைக் கேட்பார்கள். எனவே அவர்களுக்கும் இட ஒதுக்கீட்டைக் கொடுக்க வேண்டியது வரும். இதனால் இந்த இட ஒதுக்கீட்டை அனுமதிக்க முடியாது எனக் குறிப்பு எழுதி வைத்தனர். அந்தக் கோப்பை நானே நேரடியாகப் பார்த்தேன். ஆனாலும் தொடர்ந்து போராடினார்கள். உடனடியாக இட ஒதுக்கீடு கொடுக்கிறீர்களா அல்லது நான் பதவி விலகட்டுமா என்று பொப்பிலி ராசா பயமுறுத்தினார். கடைசியில் அவர்கள் கட்ட இட ஒதுக்கீட்டை ஒப்புக் கொள்வதாகக் கூறி 1935இல் ஆணை வந்தது. 1936இல் நடைமுறைக்கு வந்தது. எனவே அகில இந்திய அளவில் மைய அரசு வேலைகளில் பிற்படுத்தப்பட்டோருக்கும் தாழ்த்தப்பட்டோருக்கும் முதன்முதலில் இட ஒதுக்கீடு பெற்றது நீதிக் கட்சிதான்.

பெரியார் முதன்முதலில் காங்கிரஸ் கட்சியில் இட ஒதுக்கீடு கேட்டார். பிறகு அவர்கள் பதவிகளுக்குச் செல்ல முடிவெடுத்த பின்னால்தான் பதவியிலும், வேலை வாய்ப்பிலும், கல்வியிலும் இட ஒதுக்கீடு கோரினார். 1940இல் திருவாரூர் மாநாட்டில் மிகத்

> "பிற்படுத்தப்பட்டோருக்கான 69 விழுக்காடு இட ஒதுக்கீட்டை நான் காப்பாற்றப் போகிறேன் என கருணாநிதி சொன்னாலும் ஜெயலலிதா சொன்னாலும், வீரமணி சொன்னாலும், ராமதாஸ் சொன்னாலும் எல்லாமே வெறும் பொய்யும் புளுகுமாகத்தான் இருக்க முடியும்."

தெளிவாக பிற்படுத்தப்பட்ட தாழ்த்தப்பட்ட மக்களுக்கு விகிதாசார அடிப்படையில் ஒதுக்கீடு தரப்பட வேண்டுமென மிகத் தெளிவாகத் தீர்மானம் போடப்பட்டது. அத்தீர்மானத்திற்கும் பிறகுதான் சென்னையில் கல்வியில் இட ஒதுக்கீடு வந்தது. பார்ப்பனர்கள், பாரப்பனர் அல்லாத மேல் சாதி இந்துக்கள், பார்ப்பனர்கள் அல்லாத பிற்படுத்தப்பட்ட இந்துக்கள், இசுலாமியர்கள், கிறித்துவர்கள், ஆங்கிலோ-இந்தியர்கள் என ஆறு வகுப்புகளாகப் பிரிந்து அவர்களுக்கு ''வகுப்புவாரி உரிமை'', ''வகுப்புவாரிப் பங்கீடு'' என்று இட ஒதுக்கீடு வழங்கப்பட்டது. இதுதான் கல்வியில் அகில இந்திய அளவில் முதன்முதலில் வழங்கப்பட்ட இட ஒதுக்கீடு.

1942இல் முதன்முதலில் அம்பேத்கர் அன்றைய வைசிராயிடம் விகிதாசார அடிப்படையில் தாழ்த்தப்பட்ட மக்களான எங்களுக்கு 12.5 விழுக்காடு தர வேண்டும் என்று சொன்னார். இதனை ஆய்வு செய்து ஏற்றுக் கொண்ட வைசிராய் இட ஒதுக்கீடு தர சம்மதித்தார். ஆனால் 12.5 விழுக்காட்டை நிரப்பப் போதியவர்கள் இருக்க மாட்டார்கள் என்பதால் 8.3 விழுக்காடு தர இணங்கினார். அகில இந்திய அளவில் வேலைகளில் பட்டியல் வகுப்பாருக்கான இட ஒதுக்கீடு முதன்முதலில் அம்பேத்கரால் கிடைத்தது. பார்ப்பனர்களிடம் எந்த உரிமைகளையும் கோரிப் பெற முடியாது என்பதால் வெள்ளையர்களிடமே அனைத்து உரிமைகளையும் கேட்டுப் பெற்றிட வேண்டும் என்பதில் பெரியாரும், அம்பேத்கரும் முனைப்பாக இருந்தனர். இதனை அம்பேத்கர் வெளிப்படையாகவே சொன்னார்.

அந்த இட ஒதுக்கீட்டைப் பெற்று 57 ஆண்டுகள் ஓடிவிட்ட இன்றைய நிலையிலும் முதலாம், இரண்டாம், மூன்றாம் நிலைகளில் ஆதி திராவிடர்கள் வராமல் இருப்பது குறிப்பிடத்தக்கது. அம்பேத்கர் 1947இல் வெள்ளையர்கள் சென்றவுடன் முன்பு அவர்களிடம் தாம் கேட்ட 12.5 விழுக்காட்டை இப்பொழுது காங்கிரசாரிடம் கேட்டுப் பெற்றார். 1950க்கும் பிறகுதான் பட்டியல் வகுப்பாருக்கு அகில இந்திய அளவில் மாநில வேலைகளில் இட ஒதுக்கீடு கிடைத்தது.

1940 முதல் கல்வியில் கொடுக்கப்பட்டு வந்த இட ஒதுக்கீடு செல்லாது என உயர் நீதி மன்றமும், உச்ச நீதி மன்றமும் தீர்ப்பளித்தன. பெரியார் இத்தீர்ப்பை எதிர்த்துப் போராடினார். அதனால் 1951 ஜுன் 2ஆம் நாள் சமூகத்திலும், கல்வியிலும், பின் தங்கிய வகுப்பாருக்கும், பட்டியல் வகுப்பாருக்கும், பழங்குடியினருக்கும் இட ஒதுக்கீடு உண்டு என விதி 15 என்பதோடு 4 என்கிற ஒரு புதிய திருத்தத்தை சேர்த்து நேரு நிறைவேற்றினார்.

அம்பேத்கர் 1951இல் சில குற்றச்சாட்டுகளைக் கூறினார். அவற்றுள், முக்கியமான ஒன்று, பட்டியல் வகுப்பாருக்கு தகுதிக்கேற்ற வேலையைத் தரவில்லை. இரண்டு, நான் முன்மொழிந்த இந்து சட்டத் திருத்த



படிப்பகம்

www.padippakam.com

மசோதாவை முழுமையாக ஏற்றுக் கொள்ளவில்லை. மூன்று, அரசியல் சட்டம் 340 ஆவது பிரிவின் படி பிற்படுத்தப்பட்டோர் ஆய்வுக் குழுவை நியமிக்கவில்லை.

இதற்குப் பிறகுதான் நேரு அவர்கள் முதலாவது பிற்படுத்தப்பட்டோர் குழு எனும் ஒன்றை நியமித்தார். அதற்குத் தலைவராக இருந்தவர் காக்கா கலேல்கர் எனும் பார்ப்பனர். அதில் ஓர் உறுப்பினராய் இருந்தவர் சிவ் தயாள் சிங் சவ்ராசியா என்பவர். அவர்தான் 30-12-1944இல் கான்பூரில் அனைத்திந்திய பிற்படுத்தப்பட்டோர் லீக் மாநாட்டை நடத்திய முதல் நபராவார். அம்மாநாட்டைப் பெரியாரை அழைத்து நடத்தினார். அந்த லீக்கில்தான் பெரியாரை அனைத்திந்திய பிற்படுத்தப்பட்டோர் ஃபெடரேஷனுக்குத் தலைவராக்கினார்கள். இதில் போய் நேரு கை வைத்தார். நேரு பஞ்சாப் லால் சேட்டை பிற்படுத்தப்பட்டோர், தாழ்த்தப்பட்டோர் துறைக்கு அமைச்சராக்கினார். ''நீ பிற்படுத்தப்பட்டோருக்கு நன்மைகள் செய்து அந்த ஃபெடரேஷனுக்குத் தலைவனாக வந்து விடு'' எனத் தூண்டி விட்டார். 1953இல் அவரே தலைவரானார்.

இதன் பிறகு 1955இல் கலேல்கர் குழு தனது அறிக்கையைக் கொடுத்தது. இந்த அறிக்கை நேருவிடம் கொடுக்கப்பட்ட உடனேயே நேரு கேட்ட முதல் கேள்வி : ''பார்ப்பனர்களில் ஏழைகளாக உள்ள ஏதாவது ஒரு வகுப்பை இந்தப் பட்டியலில் சேர்த்திருக்கிறீர்களா?'' கலேல்கர் ஒரு பார்ப்பனர் என்றாலும் அதற்கு 'இல்லை' என பதிலளித்தார். அதற்கு நேரு ''எல்லாவற்றையுமே கெடுத்து விட்டீர்கள்'' எனச் சொல்லி அவ்வறிக்கையை மேசை மீது விட்டெறிந்தார். நேரு மிகப் பெரிய அறிவாளி என்றாலும் ஒடுக்கப்பட்டோர் நலனுக்கான அவ்வறிக்கையை அவர் ஏற்க மறுத்ததை இங்கு காண முடிகிறது.

நேரு 16-08-1961இல் எல்லா மாநிலங்களுக்கும் ஓர் இரகசிய சுற்றறிக்கை அனுப்பினார். தாழ்த்தப்பட்டோருக்கு மைய அரசுகளில் எக்காரணம் கொண்டும் இட ஒதுக்கீடு கொடுக்கப்பட முடியாது என்றும், மாநில அரசுகள் வேண்டுமானால் அவர்கள் விருப்பம் போல் இட ஒதுக்கீடு கொடுத்துக் கொள்ளலாம் என்றும் அவ்வறிக்கையில் கூறப்பட்டிருந்தது.

கல்வியில் இட ஒதுக்கீட்டைத் தடுத்த உச்ச நீதி மன்றத் தீர்ப்பை எதிர்த்து 1951இல் பெரியார் போராட்டம் நடத்தியதன் விளைவாய் நேரு சட்டத் திருத்தம் கொண்டு வந்தார். அதை எதிர்த்த சிலர் நேருவிடம் ''சமூக அடிப்படையிலும், கல்வி அடிப்படையிலும் பின்தங்கியவர்கள்'' என்பதோடு பொருளியல் அடிப்படையையும் சேர்க்கச் சொன்னார்கள். அப்பொழுது அதனை நேரு எதிர்த்தார். ஆனால் பிறகு அதே நேருதான் 1961இல் மாறி விட்டார்.

1965 இல் முதன் முதலில் கர்னாடகத்தில் பிற்படுத்தப்பட்டோருக்கு 50 விழுக்காடு இட ஒதுக்கீடு தரப்பட்டது. தாழ்த்தப்பட்டவர்களுக்கும் பழங்குடியினருக்குமாக 18 விழுக்காடு தரப்பட்டது. இது செல்லாது என வழக்கு தொடுக்கப்பட்டது. அப்பொழுதுதான் முதன் முதலாக இட ஒதுக்கீடு 50 விழுக்காட்டுக்குக் கீழ்தான் இருக்க வேண்டும் எனத் தீர்ப்பு வழங்கப்பட்டது. இந்தக் கருத்து அடிப்படையும் அப்பொழுதுதான் தோன்றிற்று. அப்பொழுது இதற்கு எதிராக எவருமே கருத்துத் தெரிவிக்கவில்லை.

இதே அடிப்படையில் 1976இல் உச்ச நீதி மன்றத்தில் ஒரு வழக்கு நடந்தது. அவ்வழக்கில் நீதிபதிகளாக இருந்த ஃபசல் அலி என்ற இசுலாமியரும் தாமஸ் என்ற கிறித்தவரும் ''ஒரு மாநிலத்தில் பிற்படுத்தப்பட்டோர் 80 - 90% இருந்தால் அவர்களுக்கான இட ஒதுக்கீடும் 80 - 90% இருப்பது சட்டத்திற்கு எதிரானதா?'' என்ற சிந்தனை ஓட்டத்தை எழுப்பினார்கள். இருப்பினும் ஐந்து பேர் கொண்ட நீதிபதிகள் குழுவில் இவர்களது கருத்து சிறுபான்மைக் கருத்தாகி விட்டதால் அது ஏற்கப்படவில்லை. இன்றும் அந்த நிலையே தொடர்கிறது.

இதை அடுத்து 20-12-78 அன்று மொரார்ஜி தேசாயால் நியமிக்கப்பட்ட மண்டல் குழு 01-01-79 அன்று பொறுப்பேற்றது.

11-11-91இல் ஓர் உச்ச நீதிமன்றத் தீர்ப்பு வந்தது. அத்தீர்ப்பின் படி பிற்படுத்தப்பட்டோருக்கு 27 விழுக்காடு இட ஒதுக்கீடு தரப்பட வேண்டும். ஆனால் பிற்படுத்தப்பட்டவர்கள் பட்டியலிலிருந்து பொருளியல் வளம் பெற்றோர் நீக்கப்பட வேண்டும். மேலும் எந்த வகுப்பாருக்கும் 15-11-97க்குப் பிறகு பதவி உயர்வில் ஒதுக்கீடு இருக்கக் கூடாது. இத்தீர்ப்பு பிற்படுத்தப்பட்டோர், தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினர் ஆகிய எல்லோரையும் பாதிக்கிறது.

இதனால் நாடாளுமன்றத்தில் உள்ள 119 தாழ்த்தப்பட்ட, பழங்குடி உறுப்பினர்கள் விதி 16 (4)இல் (வேலையைக் குறிக்கிறது) புதிதாக 16(4)(a) எனும் உட்பிரிவை ஏற்படுத்தினார்கள். இதுதான் சரியான வழி.

ஆனால் இதைப் பார்த்த பின்னும் இந்தியாவில் உள்ள எந்த அரசுக்கும் அறிவு வரவில்லை. பெரியார், அம்பேத்கர் தொண்டனுக்கும் புரிதல் இல்லை. இத்தகைய ஒரு தீர்வைத் தானே தமிழக அரசு நாடியிருக்க வேண்டும்? ஆனால் இவர்கள் தாங்களாகவே ஒரு சட்டம் இயற்றினர். இது மொத்தமாகவே முட்டாள்தனமானது என எங்களைத் தவிர யாரும் சொல்லவில்லை. அவர்கள் என்ன சொன்னார்களென்றால் விதி 31 (C) இன் கீழ் மாநில அரசு சட்டம் செய்து அந்த சட்டத்தை நாடாளுமன்றம் நிறைவேற்றி அதை 9 ஆவது அட்டவணையில் சேர்த்து விட்டால் அப்பொழுது அந்த பாதிப்பு போய் விடும் என்றார்கள். இதே கருத்தை சமீபத்தில் கூடச் சொன்னார்கள்.

இதற்கு என்ன செய்ய வேண்டும்? விதி 15(4) என்பதிலும் விதி 16(4) என்பதிலும் மிகத் தெளிவாக பிற்படுத்தப்பட்டோருக்குக் கல்வியிலும், வேலை வாய்ப்பிலும் அவர்களுடைய எண்ணிக்கைக்குத் தகுந்தபடி விகிதாசார இட ஒதுக்கீடு வேண்டுமென வெளிப்படையாகக் கொண்டு வர வேண்டும்.

இதைச் செய்யாமல் ''பிற்படுத்தப்பட்டோருக்கான 69 விழுக்காடு இட ஒதுக்கீட்டை நான் காப்பாற்றப் போகிறேன்'' என கருணாநிதி சொன்னாலும் ஜெயலலிதா சொன்னாலும், வீரமணி சொன்னாலும், ராமதாஸ் சொன்னாலும் எல்லாமே வெறும் பொய்யும் புளுகுமாகத்தான் இருக்க முடியும்.



படிப்பகம்

www.padippakam.com

# பறிபோகும் சேலம் உருக்காலை



**இராசேந்திர சோழன்**

தமிழகத்தின் மீதான பொருளியல் ஒடுக்கலைப் புரிந்து கொள்ள இப்பொழுது எழுந்துள்ள சேலம் உருக்காலைப் பிரச்சினையை எடுத்துக் கொள்ளலாம்.

சேலம் உருக்காலை 1970ஆம் ஆண்டு இந்திரா, கருணாநிதி ஆட்சிக் காலத்தில் திறந்து வைக்கப்பட்டது. 185 கோடி ரூபாய் முதலீட்டைக் கொண்டு தொடங்கப்பட்ட சேலம் உருக்காலையின் இன்றைய மதிப்பு ரூபாய் 1,100 கோடிக்கும் அதிகம். இந்த உருக்காலையைத்தான் இப்பொழுது மூட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது. பல ஆண்டுகளாக இலாபத்தில் இயங்கி வந்த சேலம் உருக்காலை கடந்த இரண்டாண்டுகளாக நட்டத்தில் இயங்குவதாகச் சொல்கிறார்கள். தாராளமயமாக்கல் கொள்கையினால் இங்கு துருப்பிடிக்காத இரும்பு இறக்குமதி செய்யப்பட்டு வருகிறது. அந்த இரும்பின் விலையோடு சேலம் உருக்காலையால் போட்டியிட முடியாததே நட்டத்திற்குக் காரணம்.

இந்த நட்டத்தைத் தவிர்ப்பதற்குத் தீர்வொன்று சொல்லப்பட்டது. மேற்கு வங்கம் துர்காபூரிலுள்ள 'ஸ்டீல் மெல்டிங் ஷாப்பி'லிருந்து வரும் இரும்புத் தகடுகளைக் கொண்டுதான் சேலத்தில் உருக்காலைத் தொழில் நடக்கிறது. அவை 200 கிரேட் தகடுகளாகும். அவையே 300-400 கிரேட் தகடுகளாக இருந்தால் வெளிநாட்டுத் தரத்துக்கு ஈடு கொடுக்க முடியும் என்றும் சொல்லப்பட்டது. அப்படி ஒரு 'ஸ்டீல் மெல்டிங் ஷாப்'பை சேலத்திலேயே உருவாக்குவதற்கு 300 கோடி ரூபாய் தேவை அல்லது துர்காபூரிலேயே உருவாக்க வேண்டுமானால் 80 கோடி ரூபாய் வேண்டும்.

'ஸ்டீல் மெல்டிங் ஷாப்'பை நிறுவுவதற்குத் தேவைப்படும் இப்பணத்தைச் செலவழிக்க இயலாதென அரசு கூறி விட்டது. அதற்கு ஒப்பந்தப் புள்ளி கோரப்பட்டது. அந்த ஒப்பந்தப் புள்ளிக்குப் பன்னாட்டு நிறுவனம் ஒன்று இங்கே இருக்கும் SAIL (Steel Authprity of Indian Limited) அமைப்போடு பேசி அதற்கொரு நிபந்தனை விதித்தது. இந்தியாவிலுள்ள அனைத்து உருக்காலைகளிலிருந்தும் 75,000 தொழிலாளர்களைப் பணிநீக்கம் செய்ய வேண்டும் என்பது நிபந்தனை.

வேலையிலிருந்து ஓய்வு பெறும் சலுகை கொடுத்து விடலாம் என்றது. இதற்கு 1,500 கோடி ரூபாய் தேவை. இப்பணத்தைத் தர மைய அரசும் தயாராய் இருக்கிறது. ஆனால் சேலத்தில் 300 கோடி செலவழிக்கவோ துர்காபூரில் 80 கோடி செலவழிக்கவோ தயாராக இல்லை. மேலும் விசாகப் பட்டினத்தில் மோசமான நிலையிலிருக்கும் உருக்காலைக்கு 1300 கோடி ரூபாய் கொடுத்திருக்கிறது. ஆனால், தமிழகத்துக்கு எதுவும் தர மறுக்கிறார்கள்.

அரியானாவிலுள்ள இசால் பகுதியில் ஓர் இரும்புத் தொழிற்சாலை உள்ளது. அதுவும் அந்த ஒப்பந்தப் புள்ளியில் போட்டி போடுகிறது. இதனால் சேலத்திலுள்ள தொழில் நுட்ப வல்லுனர்கள் அரியானா சென்று வேலை பார்க்கிறார்கள்.

தொழில் துறையைத் தன் கையில் வைத்திருக்கும் முரசொலி மாறன் இவற்றை எல்லாம் பார்த்துக் கொண்டு என்ன செய்து கொண்டிருக்கிறார்?

தமிழகச் சட்ட மன்றத்தில் சேலம் உருக்காலையைத் தனியாருக்கு விடக் கூடாது எனத் தீர்மானம் போட்டிருக்கிறார்கள். தீர்மானத்தைப் போட்டவுடன் கலைஞர் சொன்னது என்ன? "நாம் தீர்மானம் போடலாம். இருந்தாலும் இது நாம் சொல்லுகிற கூட்டாட்சி முறை வருகிற பொழுதுதான் செல்லுபடியாகும்.

அத்தைக்கு எப்பொழுது மீசை முளைத்து சித்தப்பா ஆவது?

# சமூக நீதிப் போர்வையில் ஆணாதிக்கம்

**பேராசிரியர் சரசுவதி**

பெண்ணுரிமை அமைப்புகள் நாடாளுமன்றத்திலும், சட்ட மன்றத்திலும் பெண்களுக்கு 33% இட ஒதுக்கீடு கேட்பதற்கான காரணம்... ஆண்களால் மறுக்கப்பட்டு வந்துள்ள உரிமைகளைப் பெறுவதற்காகத்தான். தேர்தல் கூட்டங்களில் 'தாய்க்குலமே' என்று பேசும் அரசியல்வாதிகள் பெண்கள் உரிமை கேட்கும் பொழுது மட்டும் மறுக்கிறார்கள். இங்கு ஆணாதிக்க அரசியல் நிலவி வருவதே இதற்குக் காரணம். நாடாளுமன்றத்தில் பெண் உறுப்பினர்கள் வெறும் 8% இருப்பதே இதற்குச் சான்று.



இன்றைக்கும்கூட இந்த இட ஒதுக்கீடு நிறைவேற்றப்படுமா என்பது பெரிய கேள்விக் குறியாக உள்ளது. ஏனென்றால் அங்கிருக்கும் 92% ஆண்களும் ஆணாதிக்க மனப்பான்மை கொண்டவர்களே! காலம் காலமாகத் தாங்கள் காப்பாற்றி வந்த பதவிகள் தங்கள் கையை விட்டுப் போய் விடும் என அவர்கள் அஞ்சுவதே இதற்குக் காரணம்.

நம்மால் சமூக நீதிக் காவலர்கள் என்று சொல்லப்படும் லல்லு பிரசாத் யாதவ் போன்றவர்கள் பெண்களுக்கான ஒதுக்கீட்டில் பிற்படுத்தப்பட்



படிப்பகம்

www.padippakam.com

டோர், தாழ்த்தப்பட்டோருக்கும் ஒதுக்கீடு வேண்டும் எனக் கேட்கின்றனர். இல்லையென்றால், 'பாப்' முடி வெட்டிய பெண்கள் உள்ளே நுழைந்து விடுவர் என்று நொண்டிச் சாக்கு சொல்கின்றனர். லல்லு பிரசாத் இதற்கெல்லாம் ஒரு படி மேலே போய் நாடாளுமன்றத்துக்குள் பெண்கள் வந்து விட்டால் பிறகு சென்ட் பாட்டில், நெயில் பாலிஷ், ஹேர் க்ளிப் போன்றவற்றை வாங்கி வைத்துக் கொள்ளுங்கள். ஏனென்றால் பெண்கள் உள்ளே வந்தால் அவற்றிற்குத்தான் தேவை இருக்குமேயொழிய வேறெதற்கும் தேவை இருக்காது என்றிருக்கிறார். பெண்களை எந்த அளவுக்கு கேவலமாகக் கொச்சைப்படுத்த முடியுமோ அந்த அளவுக்குக் கொச்சைப்படுத்தியிருக்கிறார் லல்லு பிரசாத்!

'சமூக நீதிக் காவலர்கள்' கூட எந்த அளவுக்குப் பெண்கள் முன்னேற்றத் திற்குத் தடையாக இருக்கிறார்கள் என்பதைக் காண முடிகிறது.

பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்கள் உரிமை கேட்கும் பொழுது அது சமூக நீதி என்று சொல்லப்படுகிறது. ஆனால் பெண்கள் உரிமை கேட்டால் ஆபாசமாகப் பார்க்கப்படுகிறது. இது எவ்வாறு சமூக நீதி பேசுவோரின் சிந்தனையாக இருக்க முடியும் என்பதை நீங்கள் யோசிக்க வேண்டும்.

சமூக நீதி என்பது வெறும் வர்ண, சாதி அடிப்படையில் கேட்கப்படும் உரிமை மட்டுமன்று. ஒடுக்கு முறை எவ்வகையில் இருந்தாலும் அவ்வொடுக்கு முறை அகற்றப்பட வேண்டும் என்பதுதான் சமூக நீதி!


***உரைகள் தொகுப்பு : நலங்கிள்ளி***

***ஏனைய மாநாட்டு உரைகளிலிருந்து... அடுத்த இதழில்...!)***

## பன்னிரண்டாம் வகுப்பு படிக்கும் தமிழ் மாணவியின் அவல நிலை :

# "தமிழ் வாசிப்பதும் எழுதுவதும் கஷ்டம்!"

சென்ற ஏப்ரல் 22 நாளிட்ட சிறுவர் மணியில் பன்னிரண்டாம் வகுப்பு படிக்கும் மாணவி பூமா சரஸ்வதி எழுதியுள்ள கடிதம், இங்கே தரப்படுகிறது. அவர் எழுதிய ஆங்கிலக் கடிதத்தின் தமிழாக்கத்தை சிறுவர் மணி வெளியிட்டுள்ளது.



Chennai - 40
6.4.2000

Respected Sir,

I hereby like to thank you first unknowingly you have done a wonderful job. Your magazine is very useful.

My second language was Hindi, and I felt very difficult to read and write Tamil. Though I can speak Tamil well I was not good at reading and writing. But after reading 'சிறுவர்மணி' I have gradually improved myself in reading short stories like சிண்டு - பிண்டு and the other joke etc. But still I find it difficult to write in Tamil.

**சி**றுவர்மணி மிகவும் அருமையாகவும் பயனுள்ளதாகவும் இருக்கிறது. பள்ளியில் எனது இரண்டாம் மொழி இந்தி அதனால் தமிழ் வாசிப்பதும் எழுதுவதும் எனக்குக் கஷ்டம். ஆனால் சிறுவர்மணியைத் தொடர்ந்து படிக்க ஆரம்பித்ததில் இருந்து கொஞ்சம் தேறிவிட்டேன். சிறுகதைகளைப் படிக்க முடிகிறது. சிண்டு-பிண்டு, கடி ஆகியவை எனக்கு ரொம்பப் பிடித்திருக்கிறது. ஆனாலும் தமிழ் எழுதுவது இன்னும் கஷ்டமாகத்தான் இருக்கிறது. கதைகள் அதிகம் போடுங்கள். நிறைய வண்ணப் படங்களையும் பிரசுரிக்கவும்.



**ஆர். பூமா சரஸ்வதி,**
**12-ம் வகுப்பு,**
**அண்ணா ஆதர்ஷ்,**
**சென்னை.**

**தமிழ் வழிக் கல்வியை மறுக்கும் உயர் நீதிமன்ற நீதிபதிகள் இதைப் படித்தாவது வருந்தட்டும், திருந்தட்டும்!**

***செய்தி அனுப்பியவர் :***
**ஆ. இரவி,**
**கொமாரபாளையம்.**

# ஆனையிறவு வெற்றி!

★ ஆனையிறவில் புலிகள் வெற்றி பெற்ற செய்தி கிடைத்தவுடன், அம்பத்தூர் பேருந்து நிலையப் பகுதியில் தமிழ் தமிழர் இயக்கத் தோழர்கள் இனிப்பு வழங்கிக் கொண்டாடினார்கள்.

★ மே 7ஆம் நாள் சிதம்பரம் நகரில் நடைபெறும் தமிழீழ ஆதரவு எழுச்சி மாநாடு, 'ஆனையிறவு வெற்றி மாநாடாக' நடைபெறும் என தமிழீழ விடுதலை ஆதரவாளர் ஒருங்கிணைப்புக் குழுவின் அமைப்பாளர் திரு. பழ. நெடுமாறன் அறிவித்துள்ளார்.

★ ஆனையிறவு - இயக்கச்சி முகாம்களைக் கைப்பற்றிய பின் விடுதலைப் புலிகள் யாழ்ப்பாணத்தில் பல முனைகளிலும் விரைந்து முன்னேறிக் கொண்டிருப்பதாக செய்திகள் வந்துள்ளன. 35,000 சிங்களப் படையினர் யாழ்ப்பாணத்திற்குள் சிக்கிக் கொண்டிருக்கிறார்களாம்.

★ சிங்களப் படையினர் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றியபோது மாவீரர் துயிலும் இல்லங்களை சேதப்படுத்திய நிகழ்ச்சி தமிழீழ மக்களைப் பெரும் வேதனைக்குள்ளாக்கியது. இப்போது நூற்றுக்கணக்கான சிங்களப் படையினர் யாழ் மண்ணில் மடிந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களது பிணத்தை சிங்கள அரசு பெற்றுக் கொள்ளும் என்ற உறுதி கூட இல்லை.



படிப்பகம்

www.padippakam.com

# உறைபனிக் காட்டில் ஈழ நெருப்புடன்

தியாகு

எமக்குத் தொழில் ஊர்சுற்றல், ஓயாதுழைத்தல், எது வரினும் சோராதிருத்தல்!. இப்படிச் சொல்லிக் கொள்ள ஆசையாகத்தான் உள்ளது. ஆனால் ஓய்ந்து ஓய்ந்துதான் உழைக்கிறேன். சிலநேரம் சோர்ந்தும் போகிறேன். ஆனால் முதலில் சொன்னேனே, ஊர்சுற்றல் - அது முழு உண்மை!

ஊர் சுற்றல் என்பது எனக்கு ஊருக்குள் சுற்றுதல் அன்று, ஊர் ஊராகச் சுற்றுதல்! ராகுல் சாங்கிருத்யாயுனரின் ஊர் சுற்றல் என்ன வகையோ? சுற்றல் வேறு, சுற்றிப் பார்த்தல் வேறு என்பதை உணர்ந்து கொள்ளவே எனக்கு நீண்ட காலமாயிற்று. உள்நாட்டளவில் சுற்றுவதற்குத்தான் அவகாசம் இருந்தது, இருக்கிறது. சுற்றிப் பார்க்கும் வேட்கையும் போதவில்லை என்பது குறைதான். பார்த்தலுக்காகவே சுற்றல் என்பது பள்ளி மாணவனாய் இருந்தபோது, ஆசிரியருமாகிய தந்தையோடு நிகழ்ந்ததுதான், அதன்

## அயல் மண்ணில்



லெப். கேணல் நாதன் கப்டன் கஜன்

## விதைகளாய்...

7


பிறகு பெரும்பாலும் இல்லை என்பதே உண்மை. கல்லூரியில் படிக்கும் போதே அரசியல் முழுமையாகத் தொற்றிக் கொண்டதால், சுற்றல் வளர்ந்து பார்த்தல் தேய்ந்து போயிற்று. பார்த்தல் வீண் என்கிற அளவுக்குப் பார்வை கெட்டுப் போனதையும்கூட ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும்.

வேடிக்கை என்னவென்றால்.... கூண்டுக்குள் கழிந்த பதினாறு ஆண்டுகள் கூட சிறை சிறையாகத்தான் சுற்றினேனே தவிர சிறைக்குள் சுற்றியது மிகக் குறைவே. இதற்கு என் வேட்கையோ வேட்கையின்மையோ பொறுப்பாகாது என்பது வேறு செய்தி.

அயல் நாட்டுப் பயணங்களே, சுற்றிப் பார்க்க எனக்குக் கற்றுத் தந்தன என்பது மிகையன்று. வேறு வழியற்ற தேவையாகத் தொடங்கியதுதான் விரைவில் தணியாத வேட்கையாக வளர்ந்தது. விருந்தோம்புகிறவர் வருந்தி அழைக்கும் போது போகத்தான் வேண்டும்! போகாமல் வேறு என்னதான் செய்யப் போகிறோம்? நேரம் போக்குவதற்காவது போகத்தான் வேண்டும்! அங்கு நானொரு கூட்டமெல்லாம் பேசுவது நடவாது. கூட்டுவதற்கும், கூட்டினாலும் கேட்பதற்கும் ஆள் கிடையாது. இந்தக் காரணிகளோடு ஒரு சிட்டிகைக் குறுகுறுப்பும் சேர்ந்து கொள்ளும் - நம்மூரில் இல்லாதது அப்படி என்னதான் இருக்கிறது பார்க்கலாம். இந்த ஒரு வாய்ப்புக்கு மறு வாய்ப்புத் தேடப் பல்லாயிரம் தேவைப்படும், யார் கொடுப்பார்?

முதலில் சிங்கப்பூரிலும், பிறகு அமெரிக்கா, கனடாவிலும், இப்போது ஐரோப்பாவிலும்..... சுற்றிப் பார்க்கிற ஆர்வம் ஆழ வேர்கொண்டு அகலப் படர்ந்து விட்டது. சுற்றலின் முதற்கூறு கற்றலே. வரலாறு, அரசியல், புவியியல், கட்டடக்கலை, தாவரவியல், விலங்கியல், சூழலியல் - இந்தப் பட்டியலுக்கு முடிவில்லை - துறைதோறும் துறைதோறும் கற்றுக் கொள்வதற்கும், மென்மேலும் கற்கத் தூண்டுவதற்கும் சுவைகுன்றா வழி சுற்றல் போல் வேறில்லை. சுற்றணைத்தூறும் அறிவு என்றே சொல்லி விடலாம்.

எங்கு போனாலும், இங்கு என்ன பார்க்கலாம், எப்போது பார்க்கலாம் என்று வெட்கப்படாமல் வினவப் பழகியாகி விட்டது. ஈழத் தோழர்களைப் பொறுத்த வரை இப்படிக் கேட்கும் வரைகூட காத்திருக்க மாட்டார்கள். நம்மை எங்கெல்லாம் அழைத்துப் போக வேண்டும் என்று அவர்களே முடிவு செய்து, நாள் நேரம் குறித்து வேண்டிய இடங்களைப் பற்றி விவரமாக அவர்கள் பேசுவதைக் கேட்டால் வியப்பாய் இருக்கும். குறிப்பாக அரசியல் வரலாற்றுடன் தொடர்புடைய இடங்களைப் பற்றி நிறையத் தெரிந்து வைத்திருப்பார்கள். ஒரு தேசிய





படிப்பகம்

www.padippakam.com

விடுதலைப் போரில் நேரடியாக அல்ல என்றாலும் சுற்றடியாகவேனும் ஈடுபட்டிருப்பவர்களுக்கு இந்த வரலாற்று உணர்வு இயல்பானதொன்றே. ஒவ்வோர் இடத்தையும், ஒவ்வொரு நிகழ்வையும் அவர்கள் தமது நாட்டோடும், நாட்டின் வரலாற்றோடும் ஒப்பு நோக்கிப் பேசுவார்கள்.

வரலாற்றுச் சுவடுகள் நீக்கமறப் பதிந்த உலகப் பெருநகரங்களில் அநேகமாய்ப் பாரிஸ்தான் முதலிடம் பெறும். பாரிஸ் நகரிலும் அதைச் சுற்றிலும் காண வேண்டிய வரலாற்றுச் சின்னங்கள் ஏராளம் ஏராளம்! பிரெஞ்சுப் புரட்சியின் போது பாஸ்டில் சிறை உடைக்கப்பட்டதும் மன்னர்கள் கில்லட்டனில் சிரச்சேதம் செய்யப்பட்டதும் இங்கேதான். பாரிஸ் கம்யூன் எனும் பெயரில் உ[illegible]ன் முதல் பாட்டாளி வர்க்கப் புரட்சி வெடித்ததும் இங்கேதான்!

எத்தனையோ பெரும் பெரும் வரலாற்று நிகழ்வுகளுக்கெல்லாம் களமாய் அமைந்த பாரிஸ் நகரத்தில் போய் இறங்கிய போது என் மனத்தில் ஓங்கி நின்றது மிகவும் அண்மைக் காலத்தில் நடந்த ஒரு வரலாற்று நிகழ்ச்சிதான். அது தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றுடன் தொடர்புடையதென்றாலும் இந்தப் பாரிஸ் நகரத்தில்தான் நிகழ்ந்தது. 1996 அக்டோபர் 26ஆம் நாள் பாரிஸ் நகரில் தோழர்கள் கஜேந்திரனும், பேரின்பநாதனும் சுட்டுக் கொல்லப்பட்ட நிகழ்ச்சியைச் சொல்கிறேன்.

சுட்டுக் கொல்லப்படுவதற்கு சில மாதங்கள் முன்புதான் கஜன் (கஜேந்திரன்) எனக்கொரு கடிதம் எழுதியிருந்தார். தோழர் எஸ்.வி.ஆர். ஐரோப்பா சென்றிருந்த போது அவர் வழியாக 'இனி' திங்களேடு கஜனுக்கு அறிமுகமாகியிருந்தது. அவர் தனது கடிதத்தில் இனியை வரவேற்று எழுதியிருந்தார். புலம்பெயர் தமிழர்களிடையே 'இனி'யை விரிவான அளவில் கொண்டுசேர்க்க வேண்டிய தேவையை வலியுறுத்தியும், ஐரோப்பாவில் அதற்கான ஏற்பாடுகளை செய்து கொடுப்பதாக உறுதியளித்தும் எழுதியிருந்தார். இதே கடிதத்திலோ அல்லது இதற்குப் பிறகு வந்த இன்னொரு கடிதத்திலோ 'பாலம்' என்ற பெயரில் கலை இலக்கியத் திங்களேடு ஒன்று வரவிருப்பது பற்றியும், அதற்கான தன் திட்டங்கள் பற்றியும் எழுதியிருந்தார்.

1996, அக்டோபரில் கஜனும், நாதனும் பாரிஸ் நகரத்தில் மர்மமான முறையில் சுட்டுக் கொல்லப்பட்ட செய்தி வந்த போது இங்கு தொலைபேசித் துறையில் வேலை நிறுத்தம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. இடையிடையே கொஞ்ச நேரம் தொலைபேசி வேலை செய்யும், பிறகு செத்துப் போகும். எப்போது உயிர் மீண்டு வரும் என்று யாருக்கும் தெரியாது. இந்த நெருக்கடிக்கிடையிலும் கோவையைச் சேர்ந்த விடியல் சிவா என்னைத் தொலைபேசியில் பிடித்து செய்தி தெரிவித்ததோடு, அடுத்தடுத்து விவரங்களும் திரட்டிக் கொடுத்தார். தமிழகத்தில் பலருக்கும் அவர் வழியாகத்தான் இந்தச் செய்தி தெரிய வந்தது.

ஏதாவதொரு தமிழக ஏட்டின் வாயிலாகத் தமிழ் மக்களுக்கு இந்தச் செய்தியை விரிவாகச் சொல்ல வேண்டும் என்று விரும்பினேன். அப்போது நான் ஜுனியர் விகடனில் சிறைத் தொடர் எழுதிக் கொண்டிருந்ததால் அவ்வேட்டின் ஆசிரியர் குழுவோடு எனக்கு நல்ல தொடர்பு இருந்தது. 'பாரிஸ் இரட்டைக் கொலை' குறித்து அவர்களிடம் நேரில் எடுத்துச் சொல்லி செய்திக் கட்டுரை வெளியிடும்படி கேட்டுக் கொண்டேன். ''நீங்களே எழுதிக் கொடுங்கள்'' என்றார்கள். நானும் தொலைபேசித் தடைகளைச் சமாளித்து, பாரிசிலுள்ள தமிழர் ஒருங்கிணைப்புக் குழு அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு விவரம் திரட்டினேன். அவர்கள் எனக்குத் தொலைநகல் வாயிலாக ஒரு செய்திக் குறிப்பை அனுப்பி வைத்தார்கள். அந்த அடிப்படையில் நானும் கட்டுரை எழுதிக் கொடுத்தேன். தொலைநகல் வழியாகக் கிடைத்த கஜன், நாதன் படங்கள் முழுத் தெளிவுடன் இல்லையாதலால் ஓவியரைக் கொண்டு அவர்களின் உருவப் படங்களை வரைந்து வெளியிடுமாறுக் கேட்டுக் கொண்டேன்.

ஆனால், அந்தக் கட்டுரையை ஜுனியர் விகடன் வெளியிட மறுத்து விட்டது. கொல்லப்பட்ட இருவரில் ஒருவர் ஒரு பத்திரிகையாளர், அதிலும் ஈழ முரசு ஏட்டின் ஆசிரியர் என்பதை நான் எடுத்துச் சொல்லியும் அவர்கள் கேட்கவில்லை. நான் தரும் செய்தி விடுதலைப் புலிகளின் சார்பாகவே இருப்பதாகவும், மறு தரப்பையும் கேட்டு விளக்கம் பெற வேண்டுமென்றும் சமாதானம் சொன்னார்கள். இங்கே மறு தரப்பென்பது அந்த மர்மக் கொலைகாரன்தானே. அவனைப் போய் இவர்கள் கேட்பதாவது, விளக்கம் கேட்டு வெளியிடுவதாவது! எது எப்படியோ, எனக்குப் பெருத்த ஏமாற்றம்!

பாரிஸ் நகரத்தில் 'லாச்சப்பல்' வீதியைத் தமிழ்த் தெருவென்றே குறிப்பிடலாம். இந்த வீதியில்தான் தமிழர் நடத்தும் உணவுக் கடைகளும், மளிகைக் கடைகளும் நிறைந்துள்ளன. ஈழ முரசு அலுவலகமும் இங்குதான் உள்ளது. இந்த வீதி ஒற்றைத் தெருவாக இல்லாமல் அருகருகே அமைந்த அநேகத் தெருக்களின் வலைப்பின்னலாக உள்ளது. பாரிஸ் நகரத்தில் இங்குதான் தமிழர்கள் மிக அதிகமாய் நடமாடக் காணலாம். இதே லாச்சப்பலில்தான் ஓர் இலையுதிர்கால அந்திப் போதில் இருட்டின் கொலைக் கைகள் ஒளி விளக்குகள் இரண்டை அணைத்துப் போட்டன.

பேரின்பநாதன் பாரிஸ் நகரில் புலிகள் இயக்கத்தின் சர்வதேச நிதிப் பொறுப்பாளராகச் செயல்பட்டு வந்தார். தாயக மீட்புப் போருக்காகப் புலம்பெயர் ஈழத் தமிழர்களை அணுகி நிதி திரட்டும் பெரும் பொறுப்பில் அவரது பங்கு முகாமையானது.

கஜேந்திரன் சிறந்த எழுத்தாளர், இலக்கியப் படைப்பாளர். ஈழமுரசை நிறுவி அதன் ஆசிரியராகப் பொறுப்பேற்றுச் செயல்பட்டுக் கொண்டிருந்தார். ஈழமுரசில் வெவ்வேறு பெயர்களில் வெவ்வேறு வடிவங்களில் அழகு மிளிரவும் ஆழ்ந்து சென்றும்



படிப்பகம்

www.padippakam.com

எழுதிக் கொண்டிருந்தார். குறிப்பாகச் சொல்வதென்றால், எள்ளற் சுவை மிளிர இவர் எழுதிய நையாண்டிக் கட்டுரைகள் எனக்கு மிகவும் பிடிக்கும். ஒருபுறம் புலம் பெயர் தமிழர்கள் அனைவரையும் தேசிய விடுதலைப் போரில் பங்காளர்களாக மாற்ற வேண்டும் என்ற துடிப்பும், மறு புறம் புலம் பெயர் வாழ்வின் போலித்தனம், பொய்த் தோற்றம் மீது ஆழ்ந்த வெறுப்பும் கஜனிடமும் அவருடைய எழுத்துக்களிடமும் காணப்பட்டன.

இத்துணை ஆற்றல் பொருந்திய கஜன் புலம் பெயர் வாழ்வில் தன்னிச்சையாக இயங்கிக் கொண்டிருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. அவர் தமிழீழ விடுதலைப் புலிகள் பிரெஞ்சுப் பணியகத்தின் நீண்ட கால உறுப்பினர். அவரது தனித்துவம் அமைப்பொழுங்கினால் அழிந்தோ குறைந்தோ போய் விடவில்லை. உயிரோட்டத்துடன் இயங்கிக் கொண்டிருக்கும் எந்த ஓர் அமைப்பும் அதன் உறுப்பினர்களின் தனித்துவ ஆற்றல் கண்டு அச்சப்படவோ, அந்த ஆற்றலை ஒடுக்கி முடக்கவோ தேவையில்லை. அஃதேபோல் தனித்துவ ஆற்றல் மிக்க ஒருவர் தன்னைப் பொது நலனுக்காக அர்ப்பணித்துக் கொண்டு செயல்படும்போது ஒழுங்கமைப்பைக் கண்டு அஞ்சுவதற்கும் ஒன்றுமில்லை. உறுப்பினர்களின் தனி ஆற்றலுக்கும் அமைப்பின் பொதுக் கட்டுப்பாட்டுக்கும் இடையிலான முரண்பாட்டுக்குச் சரியான முறையில் தீர்வு கண்டிருப்பதும், தொடர்ந்து கண்டு வருவதும் விடுதலைப் புலிகளின் வெற்றி இரகசியங்களில் ஒன்றெனத் தெரிகிறது. அவர்களிடமிருந்து கற்றுக் கொள்ள வேண்டிய பாடங்களில் இதுவும் ஒன்று.

நாதன், கஜன் இருவரும் இளைஞர்கள், நெருங்கிய நண்பர்கள், சக போராளிகளின் உணர்வு கொண்ட உற்ற தோழர்கள். வெவ்வேறு துறைகளில் பணியாற்றியவர்கள் என்றாலும், அவர்கள் சேர்ந்தே பல இடம் செல்வதும், பேசிக் கொண்டே பயணம் செய்வதும் வழக்கம்தான்.

அன்றும் (26-10-1996) அப்படித்தான். இருவரும் லாச்சப்பல் தொடர்வண்டி நிலையத்தில் இறங்கி ஈழ முரசு அலுவலகம் நோக்கி நடந்து சென்று கொண்டிருந்தார்கள். அலுவலகத்தை அடைவதற்கு முன்பே தாங்கள் வீழ்த்தப்படக்கூடும் என்று அவர்கள் நினைத்துப் பார்த்திருக்கவே மாட்டார்கள். அவர்களால் மட்டுமல்ல; எவராலும் எண்ணிப் பார்த்திருக்க முடியாத அந்தக் கொடிய நிகழ்ச்சி நடந்துதான் விட்டது.

நாதனும், கஜனும் சுட்டுக் கொல்லப்பட்டார்கள். சுட்டது யார், எவர்? யாருக்கும் தெரியாது இன்று வரை! இந்தக் கொலைச் சதியை வகுத்து நிறைவேற்றியவர்கள் தமிழீழ மக்களின் பகைவர்கள் என்பதில் மட்டும் ஐயமில்லை. சிங்களப் பேரினவாத அரசின் கைக்கூலிகள்தான் இந்த இரட்டைக் கொலையைச் செய்திருக்க வேண்டும் என்பது அனைவரின் கருத்தாகவும் இருந்தது. நாதனை ஒழித்துக் கட்டுவதன் மூலம் புலிகளின் நிதிச் சேர்ப்பை முடக்குவதும் கஜனை ஒழித்துக் கட்டுவதன் மூலம் புலம் பெயர் சமூகத்தில் புலிகளின் பரப்புரையை முடக்குவதும்தான் அவர்களின் நோக்கமாக இருந்திருக்க வேண்டும். கடல் கடந்து சென்றும் தாயக விடுதலைக்காக தங்களால் இயன்றதைச் செய்து வரும் தமிழ்ச் சமூகத்தை அச்சுறுத்தும் நோக்கம்

# தோழர் இரா. பெரியசாமி மறைவு

திருப்பூரில் 'லிங்க்' பெரியசாமி என்று பரவலாக அறியப்பட்ட தோழர் இரா. பெரியசாமி சென்ற 11-04-2000 செவ்வாய் அதிகாலை இயற்கை எய்தினார். கடந்த சில காலமாக அவர் புற்றுநோயால் பீடிக்கப்பட்டிருந்தார்.



'லிங்க்' என்பது தோழர் பெரியசாமி தொடக்க காலத்தில் நடத்தி வந்த பின்னலாடை நிறுவனம். அவர் நெடுநாளைய சி.பி.எம். உறுப்பினர் தோழர் பி.டி. ரணதிவேயிடம் ஆழ்ந்த ஈடுபாடு கொண்டவர்.

ஜூனியர் விகடனில் நான் எழுதிய 'சுவருக்குள் சித்திரங்களை'ப் படித்துவிட்டு எனக்குக் கடிதம் எழுதினார். பிறகு நேரிலும் பார்க்க வந்தார். அதிலிருந்து நாங்கள் நெருங்கிய நண்பர்களானோம். அவரது குடும்பத்தில் நானும் ஒருவனானேன்.

தோழர் பெரியசாமி தாய்த் தமிழ் கல்விப் பணியிலும், 'தமிழ்த் தேசம்' ஏட்டிலும் மிகுந்த அக்கறை கொண்டிருந்தார். தமிழீழ விடுதலைப் போராட்டத்தை உறுதியாக ஆதரித்தார். களத்தில் புலிகள் வெற்றி பெறும் செய்தி வரும்போதெல்லாம் பெருமகிழ்ச்சி அடைவார்.

தோழர் பெரியசாமி உறுதியான பார்ப்பனீய எதிர்ப்பாளராகவும் விளங்கினார். வடமொழி செத்த மொழி, செயற்கை மொழி என்பதற்கான சான்றுகளை ஏராளமாகத் திரட்டினார். அவரிடம் நல்ல தமிழ்ப் புலமையும் இருந்தது. கோதை, கண்ணகி, செல்வி, தமிழவேள் என்று தன் குழந்தைகளுக்கு நல்ல தமிழ்ப் பெயர்கள் சூட்டினார்.

ஒருமுறை 'செம்மொழியா? செத்த மொழியா?' என்ற தலைப்பில் அவர் எழுதிய கட்டுரை 'இனி' ஏட்டில் வெளியிடப்பட்டது.

தனது மொழி ஆய்வுகளை வெகுசன ஏடுகளில் கட்டுரைகளாக வெளியிட வேண்டும் என்ற விருப்பம் கடைசிவரை அவருக்கிருந்தது. அந்த விருப்பம் நிறைவேறாமலேயே அவர் மறைந்து போனார்.

*துயரம் தோய்ந்த நினைவுகளுடன்... தியாகு*



படிப்பகம்

www.padippakam.com

கொண்ட பயங்கரவாத செயல் இது. தமிழீழ விடுதலைப் புலிகளை பயங்கரவாதிகள் என்றும் பாசிசவாதிகள் என்றும் கண்டித்து 'சனநாயக'த்துக்காக ஓயாமல் ஒப்பாரி வைக்கும் 'இடதுசாரிகள்', 'முற்போக்காளர்கள்' கஜன், நாதன் படுகொலையைக் கண்டிக்கவில்லை. அதிகாரபூர்வ இந்திய, தமிழக 'இடதுசாரி'களும் இப்படித்தான் நடந்து கொண்டார்கள். இந்தக் கொலையைக் கண்டித்து அவர்களிடமிருந்து ஒரு முணுமுணுப்புக்கூட இல்லை.

இந்தப் பயணத்தில் பாரிஸ் நகரில் தங்கியிருந்தபோது பலமுறை ஈழமுரசு அலுவலகத்திற்குச் சென்றிருந்தேன். தோழர் கஜனுடன் நெருங்கிப் பழகிய பல தோழர்களை அங்கு சந்தித்தேன். கஜன் தொடர்பான பல நினைவுகளை அவர்கள் என்னுடன் பகிர்ந்து கொண்டார்கள். நமது கருத்துக்களைக் கூற நமக்கோர் ஊடகம் வேண்டும் என்று கஜன் அடிக்கடிச் சொல்வதுண்டாம். இந்தத் துடிப்புடன்தான் அவர் ஈழ முரசை நிறுவினார். தொடக்க காலத்தில் பத்திரிகை விநியோகம் செய்வதற்கு போதிய ஆட்கள் இல்லையாம். திங்கள் இரவு முழுக்க பத்திரிகையின் பிறப்பிற்காக உறங்காமல் விழித்திருந்து மறுநாள் காலை அச்சுக்குக் கொண்டு சென்று மதியம் பத்திரிகைக் கட்டைத் தோளில் சுமந்தபடி கடைகடையாக ஏறி இறங்கி விநியோகத்தை முடித்துக் கொண்டு மாலையில் சற்று ஒய்வெடுக்கும் வரை கஜனின் உழைப்பு.....எப்படிச் சொல்வோம் என்று வியந்து வியந்து வருத்தப்பட்டார்கள் அவர்கள்.

நிதிப் பொறுப்பாளராக இருந்தபோதும் நாதன் அரசியல், இராணுவம், இலக்கியம் பற்றியெல்லாம் விரிவாக விவாதிக்கக் கூடியவராக இருந்தார் என்பதை அவருடன் பழகிய தோழர்களில் ஒருவர் நினைவு கூர்ந்தார். ஈழ முரசில் வெளி வரும் எழுத்துக்களை உடனுக்குடன் படித்து விமர்சிக்கக் கூடியவராக நாதன் இருந்தார். விடுதலைப் போரின் வெற்றியில் உறுதியான நம்பிக்கை வைத்து உழைத்துக் கொண்டிருந்த நாதனின் நகைச்சுவை உணர்வுக்குச் சான்றாக அவருடன் நேர்ந்த கடைசிச் சந்திப்பை நண்பர் எடுத்துச் சொன்னார்.

''நாதன் உயிரோடிருந்த இறுதி வாரத்தில் அந்தச் சந்திப்பு நிகழ்ந்தது. அவர் என்னைப் பார்த்து 'அம்மான் என்ன மெலிந்து போய் விட்டாய்?'என்று கேட்டார். 'வேலை செய்தால் உடல் மெலியும், நீங்கள் சும்மா திரிந்தால் உடம்பு எப்படிக் குறையும்' என்று கூறினேன். அதற்கு நாதன் 'அரியாலையிலேயே வாட்டசாட்டமான குடும்பம் எங்களுடையது, அதுதானே தவிர இது சாப்பாட்டால் வந்ததில்லை' என்று கூறிச் சிரித்தார்.

கஜனும் நாதனும் வீழ்த்தப்பட்ட இடத்தைப் பார்த்தேன். அது ஓயாமல் ஊர்திகள் விரைந்து செல்லும் சாலையின் ஓரம். இந்த இடத்தில் அது நிகழ்ந்திருக்க முடியுமா என்று வியப்பாய் இருந்தது. அதை விடவும் வியப்பிற்குரிய ஒரு செய்தியை தோழர்கள் எனக்குச் சொன்னார்கள்.

மாலையில் நடந்த கொலையை மறுநாள் காலை வரை அவர்கள் அறியவில்லையாம். அவ்வழியாகச் சென்றவர்கள் ஏதோ நடந்திருக்கிறது என்ற அளவில் மட்டுமே தெரிந்து கொண்டு அதற்கு மேல் அக்கறைப்படாமல் வந்து விட்டார்களாம். அருகில் சென்று பார்க்க முயன்றவர்களை காவல்துறை விரட்டி விட்டதாம். இரவு நாதனுடன் தொலைபேசியில் தொடர்பு கொள்ள முயன்றவர்களுக்கு ஏமாற்றம். எப்போதும் அவர் கையில் இருக்கும் தொலைபேசி நிறுத்தப்பட்டிருந்ததை அறிந்து அவர்களுக்கு வியப்பாகவும் குழப்பமாகவும் இருந்ததாம்! அவரது உயிரையும் கூடவே கஜனின் உயிரையும் கொலைகாரர்கள் நிறுத்திவிட்ட செய்தி விடியவிடியத்தான் அவர்களுக்குத் தெரிய வந்ததாம்!

கஜன், நாதன் கொலை மர்மத்தை பிரெஞ்சுக் காவல் துறையால் இது வரை கண்டுபிடிக்க முடியவில்லை. ஆனால், இந்தக் கொலை புலம் பெயர் நாடுகளில் தாயக விடுதலைக்காக உழைப்பவர்களை விழிப்புற வைத்துள்ளது. அவர்கள் இயன்ற வரை எச்சரிக்கையுடன் பணியாற்றுகிறார்கள்.

கடல் கடந்து சென்று அயலகச் சூழலில் இயக்கப் பணியாற்றி உயிர்த்தியாகம் செய்த நாதனையும், கஜனையும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் மாவீரர்களாகக் கருதி சிறப்பித்துள்ளது. லெப்டினண்ட் கேணல் நாதன் என்றும் கப்டன் கஜன் என்றும் அவர்கள் குறிப்பிடப்படுகிறார்கள்.

பாரிஸ் நகரத்தில் நாதனுக்கும் கஜனுக்கும் அமைக்கப்பட்டிருக்கும் கல்லறைகளைப் பார்க்க வேண்டும் என்ற என் விருப்பம் தோழர் சுபவீயும் அங்கு வந்து சேர்ந்த பிறகுதான் நிறைவேறியது. எங்கள் இருவரையும் வெர்சே அரண்மனைக்கு அழைத்துச் சென்ற தோழர்கள் திரும்பி வரும்போது அந்த கல்லறைக்கு அழைத்துப் போனார்கள். அது பாரிஸ் நகரத்தின் மிகப் பெரிய இடுகாடுகளில் ஒன்று. அந்த இடுகாட்டில் நிரந்தரக் கல்லறை அமைப்பதென்றால் கட்டணமாகப் பெருந்தொகை செலுத்த வேண்டுமாம். எந்தச் செலவையும் பொருட்படுத்தாமல் புலம் பெயர் தமிழ் மக்கள் தங்கள் மாவீரர்களுக்கு அழகிய கல்லறை அமைத்துள்ளார்கள். மரங்களும் சிலுவைகளும் நிறைந்த அந்தப் பெரிய இடுகாட்டின் நடுவே புலிச் சின்னம் பொறித்த இரு அழகிய கல்லறைகளில் அருகருகே அந்த மாவீரர்கள் மீளாத் துயில் கொண்டிருக்கிறார்கள். நானும் சுபவீயும் அந்தக் கல்லறைகளின் அருகில் நின்று எங்கள் மௌனத்தைக் காணிக்கையாக்கி, நாங்கள் ஒரு போதும் பார்த்தறியாத அந்த உயிர்த் தோழர்களின் நினைவுகளை நெஞ்சில் சுமந்து அங்கிருந்து புறப்பட்டோம்.

தாய் மண்ணின் விடுதலை விளைச்சலுக்காக அயல் மண்ணில் வீழ்ந்த விதைகள் அல்லவா கஜனும் நாதனும்?



படிப்பகம்

www.padippakam.com

'தன்னுரிமை' - விவாதம் தொடர்கிறது!

# இதுவும் ஒரு வேண்டுகோள்!

தியாகு

'தமிழர் கண்ணோட்டம்' பிப்ரவரி இதழில் தோழர் இராஜிவிந்தன் 'தன்னுரிமை குறித்த விவாதம் எழுப்பும் தோழர்களுக்கு ஒரு வேண்டுகோள்' விடுத்திருக்கிறார்.

அவர் தனது வேண்டுகோளை இப்படித் தொடங்குகிறார். ''தன்னுரிமை சொல்லாக்கம் குறித்து தோழர் தியாகுவின் விவாதம் தொடரும் நிலையில்....''

இந்தத் தொடக்கமே தவறு. இது வெறும் சொல்லாக்கம் தொடர்பான விவாதமன்று என்பதை முன்பே தெளிவாகச் சொல்லியிருக்கிறேன்.

என் விவாதக் குறிப்பின் ('தமிழ்த்தேசம்' 1999 ஆக - செப்) 6 ஆம் பத்தியில் இப்படிச் சொல்கிறேன். ''ஆனால், இது வெறும் தமிழாக்கச் சிக்கல் மட்டுமன்று.''

சுய நிர்ணயம் என்பதற்கும் சுய நிர்ணய உரிமை என்பதற்கும் இடையிலான வேறுபாடு தெரியாதபடி இரண்டையுமே 'தன்னுரிமை' என்று குறிப்பிடுவதால் விளையும் குழப்பத்தை நான் எடுத்துக் காட்டியுள்ளேன். இந்த வேறுபாடு தெரிகிறபடி சுய நிர்ணயம் என்பதை தன் தீர்வு என்றும், சுய நிர்ணய உரிமை என்பதை தன் தீர்வு உரிமை என்றும் தமிழ்ப் படுத்தலாம் என்றும் முன்மொழிந்துள்ளேன். ஆனால் இதை வைத்துக் கொண்டு என் கருத்து முழுவதையும் சொல்லாக்கம் தொடர்பான விவாதமாக குறுக்கி விட வேண்டாம் என்று தோழர் இராஜிவிந்தனுக்கு நானும் ஒரு வேண்டுகோள் விடுக்கிறேன்.

இது வெறும் சொல்லாக்கம் தொடர்பான விவாதமே என்றால் தன்னுரிமை என்று சொல்வதை தன்தீர்வு என்றோ தன்தீர்வு உரிமை என்றோ மாற்றிக் கொண்டால் நான் நிறைவடைந்து விட வேண்டும். இல்லை, அப்போதும் நான் நிறைவடைய மாட்டேன். சொல்லப்போனால் அதன் பிறகுதான் உண்மையான விவாதமே தொடங்குகிறது. ஏனென்றால் சொற்குழப்பம் நீங்கிய பிறகு பொருட் குற்றத்தை வெளிப்படுத்துவது எளிதாகி விடும்.

தோழர் இராஜிவிந்தன் மட்டுமல்ல, வேறு பல தோழர்களும்கூட நான் ஒரு வார்த்தையைப் பிடித்துக் கொண்டு வாதம் பண்ணிக் கொண்டிருப்பதாக நினைக் கிறார்கள். 'தன்னுரிமையா? தன் தீர்வா?' இதுதான் விவாதத்தின் அடிப்படைக் கேள்வி என்று அவர்கள் தவறாக எண்ணிக் கொண்டிருக்கிறார்கள்.

இந்த இரண்டில் எதுவுமே விவாதத்தின் அடிப்படைக் கேள்வி அன்று. விவாதத்தின் அடிப்படைக் கேள்வியைத் தெளிவாகப் புரிந்து கொள்வதற்கும் அதற்கு விடை காண்பதற்கும் முன்னதாக தீர்க்க வேண்டி இருப்பதுதான் சொல்லாக்கச் சிக்கல் என்பது.

விவாதத்துக்குரிய அடிப்படைக் கேள்வி பெட்டிக்குள் இருக்கிறது. அந்தப் பெட்டிக்கு ஒரு பூட்டாக சொல்லாக்கச் சிக்கல் தொங்கிக் கொண்டிருக்கிறது. பூட்டைத் திறப்பது பூட்டுக்காகவே அன்று. அது பெட்டியைத் திறப்பதற்காக!

அப்படியானால் விவாதத்தின் அடிப்படைக் கேள்வி எது? தமிழ்த் தேசத்தின் மீதான தேசிய ஒடுக்கு முறையைப் பொறுத்தவரை அதற்குத் தீர்வாக முன் வைக்கப்படும் புரட்சித் திட்டமும் முழக்கமும் என்ன? (சாதிய ஒடுக்கு முறையை இப்போதைக்கு ஒதுக்கி வைத்து விடலாம். பிறகு அதையும் சேர்த்துக் கொள்வோம்.

இந்தக் கட்டத்தில், 'தன்னுரிமையா? தேசிய விடுதலையா?' என்பதுதான் விவாதத்தின் அடிப்படைக் கேள்வி. இது வெறும் சொல்லாக்கம் தொடர்பான விவாதம் என்று இராஜிவிந்தன் கருத மாட்டார் என நம்புகிறேன்.

இந்த அடிப்படைக் கேள்வியில் தன்னுரிமை என்ற சொல்லை 'தன் தீர்வு' என்றோ 'தன்தீர்வு உரிமை' என்றோ மாற்றுவதால் விவாதம் முடிவடைந்து விடாது. தன்னுரிமை என்று த.தே.பொ.க. சொல்வது தன் தீர்வையா? தன் தீர்வு உரிமையையா? என்பதைத் தெளிவுபடுத்தினால் மேற் சொன்ன அடிப்படைக் கேள்வியை விளங்கிக் கொண்டு விவாதிப்பது எளிதாகி விடும் என்கிறேனே தவிர வேறொன்றுமில்லை.

தன்னுரிமையா? தேசிய விடுதலையா?

இந்த அடிப்படைக் கேள்விக்கு தோழர் இராஜிவிந்தன் என்ன விடை சொல்கிறார்?

அவர் எழுதுகிறார் :

''தன்னுரிமைப் புரட்சி என்கிற இலட்சியக் கோட்பாட்டை தமிழ்த் தேசப் பொது வுடைமைக் கட்சி இன்றைய இந்திய, தமிழகச் சூழலில் குறிப்பான முறை யில் திரளாகப் பயன்படுத்தி மக்களைத் திரட்டிப் போராடி தில்லி ஆதிக்கத்தை வீழ்த்தி, தமிழ்த் தேசக் குடியரசு நிறுவிடவும் அதன் மூலம் ஜனநாயக செயல் திட்டத் தினை நிறைவு செய்யவும் திட்டம் கொண்டுள்ளது.''

நன்று, தோழரே! தில்லி ஆதிக்கத்தை வீழ்த்தி தமிழ்த் தேசக் குடியரசை நிறுவுவதற்கு தேசிய விடுதலை என்றும், ஜனநாயக செயல் திட்டத்தை நிறைவு செய்வதைச் சேர்த்து அதையே தேசிய ஜனநாயகம் என்றும் வரையறுப்பதுதானே மார்க்சியர் வழக்கம்? இதை 'தன்னுரிமைப் புரட்சி' என்ற புதிய (குழப்பமான) சொல்லாடல் வழியாக தெரிவிக்க வேண்டிய தனிச்சூழல் என்னவோ? நீங்களே சொல்லி யிருப்பதுபோல இது வரை உலகப் பொதுவுடைமை இயக்க வரலாற்றில் புரட்சிகளை தேசிய ஜனநாயகம், புதிய ஜனநாயகம், புரட்சிகர ஜனநாயகம், சோசலிசம் என்று வகைப்படுத்தி வடிவமைத்திருக்கிறார்கள்.

தோழர் இராஜிவிந்தன் சொல்கிறார் :

''புரட்சியின் பெயர்ப் பொருத்தம் அந்தந்த நாடுகளின் வரலாற்றுச் சூழலுக்குரியதே தவிர வேறு ஒன்றுமில்லை.''

சரி, தோழரே! நீங்கள் எடுத்துக் காட்டுகிற புரட்சித் திட்டத்தை தேசிய விடுதலை என்றோ தேசிய ஜனநாயகம் என்றோ பெயரிட்டழைக்க விடாமல் தடுக்கிற அந்த



படிப்பகம்

www.padippakam.com

வரலாற்றுச் சூழல் என்ன? தன்னுரிமை புரட்சி என்ற பெயரையே பொருத்தமுடையதாக்குகிற அந்த வரலாற்றுச் சூழல் என்ன?

தோழர் இராஜிவிந்தன் அதிர்ச்சிக்குரிய ஒரு செய்தியைச் சொல்கிறார்.

''தமிழ்த் தேசப் பொதுவுடைமைக் கட்சி ஒடுக்குமுறைக்கு உள்ளான தமிழ்த் தேசத்திற்கு விடுதலையையும் தனி அரசையும் ஒரு சேரக் கோருகிறது. (அதுவே தன்னுரிமை இலட்சியம்) தமிழ் மக்கள் எழுச்சியால் ஏற்படும் புரட்சிகர அரசு தனக்குரிய மக்கள் ஜனநாயகத் திட்டத்தினை நிறைவு செய்வதை தன்னுரிமைப் புரட்சி என்கிறோம். (த.தே.பொ.க. கொள்கை அறிக்கை, இரண்டாம் பதிப்பு, பத்தி 10 - 12, பக்கம் 12 - 16.)

இது நம் விவாதத்தில் ஒரு திருப்பம் என்பதில் ஐயமில்லை. த.தே.பொ.க. தமிழ்த் தேசத்துக்கு விடுதலை கோருகிறதாம்! தனி அரசும் கோருகிறதாம்! இதைத்தான் தன்னுரிமை இலட்சியம் என்கிறதாம். இதுதான் உண்மை யென்றால் விவாதத்தில் பாதி ஏற்கெனவே முடிந்து விட்டதாகக் கொள்ளலாம்.

ஆனால் த.தே.பொ.க. கொள்கை அறிக்கையில் தமிழ்த் தேச விடுதலை பற்றியோ தனி அரசு பற்றியோ எந்தக் குறிப்பும் இல்லை. இருந்தால் எடுத்துக் காட்டட்டும்.

''த.தே.பொ.க. கொள்கை அறிக்கை ''புரட்சியின் எதிரிகளை இனம் காட்டுகிறது. ஆதரவு சக்திகளின் அணி வகுப்பைத் தொகுக்கிறது. இறையாண்மையை மீட்டு அரசு அமைக்க இலக்கு நிர்ணயிக்கிறது'' என்றெல்லாம் இராஜிவிந்தன் பெருமைப்படுவதைக் கேள்விக்குள்ளாக்கு வது என் நோக்கமன்று. ஒரு கொள்கை அறிக்கை சரியான சில முற்கோள்களை கொண்டிருப்பதாலேயே அதன் முடிவு அல்லது முடிவுகளும் சரியாகத்தான் இருக்க வேண்டும் என்பதில்லை. ''சரியான முற்கோள்களிலிருந்து தவறான முடிவுகளுக்கு'' என்பது லெனினுடைய வாசகங்களில் ஒன்று என நினைவு.

இராஜிவிந்தன் சொல்கிறார் :

''வெள்ளை ஏகாதிபத்திய எதிர்ப்புப் போருக்கும் இன்றைய தில்லி ஆதிக்க ஒழிப்புப் போருக்கும் இடையில் வரலாற்றுக் காலகட்டம் மற்றும் அரசியல் வளர்ச்சிக் கட்ட மாறுதலை கணக்கில் கொண்டோமானால் தன்னுரிமைப் போர் என்பது இன்றைய நிலையில் கூடுதல் பொருளும் பொருத்தமும் கொடுக்கக் கூடியதே!''

நன்று, தோழரே! நீங்கள் குறிப்பிடுகிற இரண்டு போர்களும் வரலாற்றுக் காலகட்டத்திலும் அரசியல் வளர்ச்சிக் கட்டத்திலும் வேறுபட்டவை என்பதை ஏற்றுக் கொள்கிறேன். அந்த வேறுபாடுதான் தேசிய விடுதலைக்குப் பதிலாக தன்னுரிமைக்கு முன்னுரிமை தந்து போராடும்படி உங்களைத் தூண்டுகிறதா? 'எப்படி என்று விளக்கும்படி நான் உங்களை அன்போடு வேண்டிக் கொள்கிறேன்.

த.தே.பொ.க. கொள்கை அறிக்கையை மீண்டும் ஒரு முறை படிக்கத் தூண்டிய தோழர் இராஜவிந்தனுக்கு நன்றி! அந்தக் கொள்கை அறிக்கையில் பத்தி 11இல் 'தன்னுரிமை பெற்ற தமிழ்த்தேசம்' நிறைவு செய்ய வேண்டிய நோக்கங்கள் பட்டியலிடப்பட்டுள்ளன.

அந்தக் கடைசி நோக்கம் இப்படிச் சொல்கிறது-

''20. தேசிய விடுதலைப் போராட்டங்கள், இனவெறி, நிறவெறிக்கு எதிரான போராட்டங்கள், ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கங்கள், சோசலிசத்திற்கான போராட்டங்கள் ஆகியவற்றை ஆதரித்தல்.''

ஆக, 'தன்னுரிமை பெற்ற தமிழ்த் தேசம்' ஆதரிக்க வேண்டிய போராட்டங்களில் தன்னுரிமைப் போராட்டத் திற்கோ தன்னுரிமைப் புரட்சிக்கோ இடமே இல்லை. அப்படியானால் தன்னுரிமைப் போராட்டம் என்பது உலகத்தில் தமிழ் நாட்டிற்கு மட்டுமே உரியது என்று த.தே.பொ.க. கருதுகிறதா? தோழர் இராஜிவிந்தன் சுட்டுகிற 'வரலாற்றுக் கால கட்டம் மற்றும் அரசியல் வளர்ச்சிக் கட்ட மாறுதல்' என்பது தமிழகத்திற்கு மட்டுமே பொருந்தக் கூடியதா?

தோழர் இராஜிவிந்தன் அவர்களே! த.தே.பொ.க. கொள்கை அறிக்கை நிலைபாட்டின் மீது எங்கள் வினாக்களையும், விமர்சனங்களையும் முன் வைக்குமாறும், எங்கள் மாற்றுக் கருத்துக்களை மார்க்சிய அடிப்படையில் நிலை நிறுத்துமாறும் நீங்கள் விடுத்த வேண்டுகோளை என்னால் இயன்ற வரை நிறைவு செய்திருப்பதாகக் கருதுகிறேன்.

உங்களுக்கு நானும் ஒரு வேண்டுகோள் விடுக்கலாம் தானே?

ஒரு சொல்லின் சிறையில் சிக்கிக் கொண்டு அந்தச் சிறைக்குள்ளேயே அடைபட்டுக் கிடக்கும் பிடிவாதத்தை விட்டொழியுங்கள்.

இந்தப் பிடிவாதம்தான் உங்களைத் தன்முரண்பாடு களுக்குள் தள்ளி விடுகிறது என்பது என் பணிவான கருத்து. நீங்களும் குழம்பி மற்றவர்களையும் குழப்புவது ''புரட்சிகரக் கொள்கை வளர்ச்சிக்கு உரிய பங்களிப்பாக'' இருக்க முடியாது.

## உரிமையும் விடுதலையும்

**தாம்பரம் தமிழ்மணி**

தமிழர் கண்ணோட்டம் 2000 பிப்ரவரி இதழில் 'தன்னுரிமை குறித்த விவாதம் எழுப்பும் தோழர்களுக்கு ஒரு வேண்டுகோள்!' என்ற தலைப்பில் தோழர் இராஜிவிந்தன் எழுதியிருக்கிறார். 'தமிழ்த் தேசம்' 99 திசம்பர் இதழில் நான் எழுதிய 'புரட்சித் திட்டமும், சுயநிர்ணய உரிமையும்' கட்டுரைக்கு மறுப்பாக இது எழுதப்பட்டுள்ளது.

தோழர் இராஜிவிந்தன் சொல்கிறார் :

''தன்னுரிமைப் புரட்சி என்கிற இலட்சியக் கோட்பாட்டை தமிழ்த் தேசப் பொதுவுடைமைக் கட்சி இன்றைய இந்திய, தமிழகச் சூழலில் குறிப்பான முறையில் திறனாகப் பயன்படுத்தி மக்களைத் திரட்டிப் போராடி தில்லி ஆதிக்கத்தை வீழ்த்தி தமிழ்த் தேசக் குடியரசு நிறுவிடவும் அதன் மூலம் ஜனநாயக செயல் திட்டத்தினை நிறைவு செய்யவும் திட்டம் கொண்டுள்ளது''

இதுவே த.தே.பொ.க. திட்டம் என்பதை வரவேற் கிறோம். ஆனால், இது தமிழ்த் தேச விடுதலைப் புரட்சி அல்லது தமிழ்த் தேசிய ஜனநாயகப் புரட்சி ஆகுமே தவிர 'தன்னுரிமைப் புரட்சி' ஆகாது. முன்பு கூறியதையே



படிப்பகம்

www.padippakam.com

## உணர்வு மட்டும் போதாது!

''தமிழ்த் தேசம்' மார்ச்சு இதழில் படிப்பாளர் பக்கத்தில் குடந்தை இளஞ்சேட்சென்னி கூறும் கருத்துக்கள் எங்களிலும் பலருக்கு உண்டு. கி.வெ., மணியரசன், கார்முகில் ஆகியோருக்கான பதில்கள் கிட்டத்தட்ட ஒரே பொருளைப் பற்றியது என்பதால் இது போன்ற குழப்பங்கள் வருவது இயல்பு''

- இது ஒரு தோழர் எழுதியுள்ள கடிதத்தின் கருத்து. கி.வெ., மணியரசன், கார்முகில் ஆகியோருக்கான பதில்கள் கிட்டத்தட்ட ஒரே பொருளைப் பற்றியது என்று சொல்வதை என்னால் ஏற்றுக் கொள்ளவும் முடியவில்லை, விளங்கிக் கொள்ளவும் முடியவில்லை. கி.வெ., கார்முகில் ஆகியோருடன் என் விவாதம் 'தன்னுரிமை' பற்றியது. தோழர் மணியரசனுடன் என் விவாதம் தேசிய விடுதலைப் போராட்டத்தில் கம்யூனிஸ்டுகளின் பங்கு பற்றியது. இரண்டும் 'கிட்டத்தட்ட ஒரே பொருள்' என்றால் என்ன நியாயம்?

'தன்னுரிமை' தொடர்பான விவாதத்திலும் கூட கி.வெ.யுடனான விவாதமும், கார்முகிலுடனான விவாதமும் வெவ்வேறு கோணத்திலானவை என்பதைக் கருத்தில் கொள்ள வேண்டும். தேசிய ஒடுக்குமுறைக்குத் தீர்வு என்ற வகையில் எது சரியான புரட்சி முழக்கம்? 'தன்னுரிமை'யா? தேசிய விடுதலையா? இதுதான் விவாதத்தின் அடிப்படைக் கேள்வி. இந்த அடிப்படைக் கேள்விக்கு தேசிய விடுதலைதான் என்று விடை சொல்வதில் நானும் தோழர் கார்முகிலும் உடன்படுகிறோம். தோழர் கி.வெ.யைப் பொறுத்த வரை இதற்கு மாறாக, 'தன்னுரிமை'தான் என்று விடையளிக்கிறார். இந்நிலையில் எல்லாம் ஒன்றுபோல் தெரிந்தால் அதற்கு நான் பொறுப்பல்லேன். வருகிற குழப்பங்களைப் போக்கிக் கொள்வதற்கு முயற்சி தேவை. அவற்றிலிருந்து ஓடி ஒளிந்து கொள்வது தீர்வாகாது.

வேறு சில தோழர்கள் விவாதமே வேண்டாம் என்று நினைக்கிறார்கள்; சொல்கிறார்கள். இதனால் ஒற்றுமை கெட்டுப் போகும் என்பது இவர்களின் அச்சம். அறிவு வழிப்பட்ட ஒற்றுமைக்கு விவாதம் இன்றியமையாத் தேவை என்பதை இவர்கள் உணர மறுக்கிறார்கள். ஒற்றுமைக்கு உணர்வு மட்டுமே போதும் என்பது இவர்களின் நம்பிக்கை.

அரசியலுக்கு கொள்கை தேவையில்லை என்ற பார்வைக்கும் இந்த 'உணர்வு அரசியலு'க்கும் அதிக வேறுபாடில்லை. நுனிப்புல் மேய்ந்தே பழகிவிட்டால் பிறகு அடிப்புல் கசக்கத்தானே செய்யும்?

*- தியாகு*

மீண்டும் மீண்டும் சொல்கிறேன். 'தன்னுரிமை' (சுய நிர்ணய உரிமை) என்பது பொதுப்படையானது, பொதுப்படையானது, பொதுப்படையானது. அந்தப் பொதுவான உரிமையின் அடிப்படையில் தமிழ்த் தேச விடுதலை என்கிற குறிப்பான குறிக்கோளுக்காக போராடுவதாகச் சொன்னால் தவறில்லை. ஆனால் நீங்கள் போராடுவதே தன்னுரிமைக் குத்தான் என்றால், உங்களிடம் குறிப்பான திட்டம் இல்லை என்றாகிவிடும்.

இராஜிவிந்தன் சொல்கிறார் :

''உலகப் பொதுவுடைமை இயக்க வரலாற்றில் புரட்சி களை தேசிய ஜனநாயகம், புதிய ஜனநாயகம், புரட்சிகர ஜனநாயகம், சோசலிசம் என்று வகைப்படுத்தி வடிவமைத் திருக்கிறார்கள்''

உண்மைதான். ஆனால், உலகில் எங்காவது 'தன்னுரிமைப் புரட்சி' என்று வகைப்படுத்தியதுண்டா? எதாவது முன்னுதாரணம் காட்ட முடியுமா?

''தமிழ்த் தேசப் பொதுவுடைமைக் கட்சி ஒடுக்குமுறைக்கு உள்ளான தமிழ்த் தேசத்திற்கு விடுதலையையும் தனியரசையும் ஒரு சேரக் கோருகிறது'' என்று தோழர் இராஜிவிந்தன் சொல்வது புதிய செய்தி. அவர் சொல்வது உண்மையென்றால் அந்தப் புரட்சியின் பெயர் விடுதலைப் புரட்சிதானே? அது எப்படி 'தன்னுரிமைப் புரட்சி' ஆக முடியும்? 'தன்னுரிமைப் புரட்சி' என்று பேசிக் கொண்டே விடுதலையும் தனியரசும் கோருகிறோம் என்று சொல்வது கொள்கைக் குழப்பம்தானே தவிர வேறல்ல.

தமிழ்த் தேசப் பொதுவுடைமைக் கட்சியின் கொள்கை அறிக்கை மீது வினாக்களையும் விமர்சனங்களையும் முன் வைக்குமாறு தோழர் இராஜிவிந்தன் கேட்டுக் கொள்கிறார். இது விவாதத்தை திசை திருப்பும் முயற்சி. ஏனென்றால் இப்போதைய விவாதம் 'தன்னுரிமை' எனப்படுவதைப் பற்றியது தானே தவிர, த.தே.பொ.க. கொள்கை அறிக்கை பற்றியது அன்று.

தமிழ் தமிழர் இயக்கத்தின் அடிப்படை ஆவணத்திலும் கூட தில்லி ஆதிக்கத்தை வீழ்த்துவது, சாதி ஒழிப்பு, தீண்டாமை ஒழிப்பு, சமூக நீதி, தமிழ்த் தேசக் குடியரசு அமைக்கும் உரிமை என்றெல்லாம் இருக்கத்தான் செய்கிறது. தமிழ் தமிழர் இயக்கத்தின் மூன்று குறிக்கோள்களில் ஒன்று: தமிழ்த் தேசத் தன்னுரிமை! தமிழர் தேசிய இயக்கம் சொல்கிறது : தன்னுரிமை தமிழர் முன்னுரிமை! தன்னுரிமை பேசும் வேறுசில இயக்கங்களும் உள்ளன.

இப்படி இருக்க, ''தன்னுரிமை என்ற சொல்லை மட்டும் தனியே எடுத்து ஆய்வு நடத்தி முடித்திடத் துடிக்கிறார்கள்'' என்று கட்டுரையாளர் வருத்தப்பட வேண்டிய அவசியம் என்ன? இந்த வெளிப்படையான விவாதம் குறிப்பிட்ட ஓர் அமைப்பையோ கட்சியையோ குறிவைத்து நடத்தப்பட வில்லை, அது கொள்கைக் குழப்பத்தைத் தவிர வேறு எதையும் முடித்திடத் துடிக்கவில்லை என்பதைத் தோழர் இராஜிவிந்தன் கருத்தில் கொள்ள வேண்டுகிறேன். ●


தமிழ்த் தேசம்

ஆண்டு நன்கொடை ரூ. 60/-

பணம் அனுப்ப வேண்டிய முகவரி :

தமிழ்த் தேசம்

அறை எண் 3, முதல் மாடி, 242, என்.எஸ். கிருஷ்ணன் சாலை, (ஆர்க்காடு சாலை), வடபழனி, சென்னை - 600 026.




படிப்பகம்

www.padippakam.com

அந்தச் சிறுமி வேறு யாருமல்ல; மீகரின் மகள்களில் ஒருத்தி தான். மீகருடைய வீட்டிற்குச் சென்ற பிறகு எல்லாவற்றையும் விவரமாகத் தெரிந்து கொண்டோம்.

மீகருடைய வீட்டைக் காவலர்கள் முற்றுகையிட்டுச் சோதனை நடத்தியுள்ளார்கள். எங்கள் வருகையை மோப்பம் பிடித்தார்களோ என்னவோ தெரியவில்லை. காவலர்கள் சோதனை மேற்கொண்டிருக்கும் பொழுதே, எங்களை எச்சரிக்கை செய்யும் பொருட்டு இவள் யாருக்கும் தெரியாமல் வீட்டை விட்டு வெளியே நழுவி வந்து விட்டாள்.

சரியான நேரத்தில் அவளுடைய எச்சரிக்கை எங்களுக்குக் கிடைத்து விட்டது. காவலர்கள் அனைவரும் எங்களைக் கடந்து சென்ற பிறகே, மறைவிடத்தை விட்டு வெளியே வந்து மீகர் வீடு சென்றடைந்தோம்.

சற்று நேரத்திற்கு முன்னர் நடந்து முடிந்த சோதனையின் அரவம் எதுவுமின்றி எங்களுக்குச் சுவையான தேநீர் கிடைத்தது. தேநீரைச் சுவைத்துக் கொண்டேதான், மீகர் மகளின் அறிவார்ந்த செயலைக் கேட்டுத் தெரிந்து கொண்டோம். அவளுக்கு எங்கள் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொண்டோம்.

மீகருடைய இல்லத்திலிருந்து திப்பரேரி மாவட்டத்தின் தென் பகுதியிலிருந்த போகர்லகான் (Boherlahan) நகரத்தைச் சேர்ந்த லீகி (Leahy)யின் வீட்டிற்குச் சென்றோம். பின்னர் அதே மாவட்டத்திலுள்ள நாத்ஸ்டவுனில் (Nodstown) வசித்து வந்த தொன்னெல்லி (Donnelly) என்பவருடைய வீட்டிற்குச் சென்றோம். அங்கு எங்கள் படைப்பிரிவின் கூட்டத்தைக் கூட்டி விவாதித்தோம்.

ஊர் ஊராக ஒளிந்து மறைந்து திரிவது எங்களு‌_ வேதனையையும் எரிச்சலையும் தந்தது. நண்பர்களுடன் எங்கள் மனக் குமுறலைப் பகிர்ந்து கொண்டோம். செயலூக்கமுள்ள வேலைத் திட்டங்களைப் பற்றி விரிவாகப் பேசினோம். ஏற்கெனவே தலைமையால் புறக்கணிக்கப்பட்ட தென் திப்பரேரியை விட்டு ஆங்கிலேயப் படை வெளியேற வேண்டும்; இல்லையெனில் அழித்தொழிக்கப்படுவர் என்ற தீர்மானத்தைப் பற்றி மறுபடியும் விவாதித்தோம். இம்முறை தீர்மானத்தை நாங்களாகவே வெளியிடுவது என்று உறுதியாக முடிவெடுத்தோம்.

பிப்ரவரி மாதக் கடைசி வாக்கில், ''அழித்தொழிக்கப்படுமுன் ஆங்கிலப் படையே தென் திப்பரேரியை விட்டு வெளியேறு'' என்ற எச்சரிக்கைச் சுவரொட்டிகள் மாவட்டத்தின் பல இடங்களில் ஒட்டப்பட்டிருந்தன. செய்தித்தாள்கள் இதைப் பற்றி எள்ளி நகையாடும் வகையில் செய்திகள் வெளியிட்டிருந்தன. எங்களுடைய எச்சரிக்கையைச் சிறு பிள்ளைகளின் உளறல் என்றே பலரும் கருதினர். ஆனால் பின்னர்

## டான் பிரீனின் அயர்லாந்து விடுதலைக்கான எனது போராட்டம்

## 10

# மரணத்தின் வாசலில்...

**கலைவேலு**

நடந்த பல நிகழ்வுகள் அயர்லாந்து சிறு பிள்ளைகளின் வீரத்தை உலகிற்குப் பறைசாட்டுவதாய் அமைந்தன. எங்கள் தலைமை உட்பட பலர் மூக்கில் விரல் வைக்க வேண்டியதாயிற்று.

இந்த ஆலோசனைக் கூட்டத்திற்குப் பிறகு மீண்டும் மாவட்டத்தின் வட பகுதிக்குத் திரும்புவதெனத் தீர்மானித்தோம். கிரேயனி (Creany) நகரைத் தேர்ந்தெடுத்தோம். அங்கு நாங்கள் வரவிருப்பதை எப்பொழுதும் செய்வதுபோல் முன்கூட்டியே தோழர்களுக்குச் சொல்லி அனுப்பினோம். பேத்ரிக் கின்னேனை அப்பர் சர்ச்சில் மகிழுந்துடன் காத்திருக்கும்படி கேட்டுக் கொண்டோம்.

அப்பர் சர்ச் வரையிலான பயணம் நீண்ட நடைப் பயணமாக அமைந்தது. காடும் மலையும் சூழ்ந்த அப்பகுதியில் இரவில் நடப்பது மிகக் கடினமாக இருந்தது. பிப்ரவரி மாதத்தில் கூட குளிர் வாட்டி எடுத்தது. அப்பர் சர்ச் வந்து சேர்ந்த பொழுது மிகவும் களைத்துப் போயிருந்தோம்.

கேட்டுக் கொண்டபடியே அப்பர் சர்ச்சில் கின்னேன் மகிழுந்துடனும் மற்றத் தோழர்களோடும் காத்திருந்தது நல்லதாகப் போயிற்று. கிரேயனில் இருந்த மர்பியின் வீட்டிற்கு மகிழுந்தில் பயணம் செய்தோம். மர்பி அருமையான தோழர். அப்பகுதி மக்கள் அவரை ''ஸ்டேசன் மாஸ்டர்'' என அழைப்பார்கள். அதற்கான காரணம் தெரியவில்லை. பக்கத்தில் தொடர்வண்டி நிலையம் எதுவும் அமைந்திருக்கவில்லை. பதினைந்து கல் தொலைவிலேயே அமைந்திருந்தது.

மர்பியின் வீட்டிற்குச் சென்று சேர்ந்தபொழுது விடியற்காலை மூன்று மணியாகி இருந்தது. அந்த நேரத்தில் அவர் எங்களுக்காக உணவு தயாரித்துக் கொண்டிருந்தார். நல்ல பசியோடு வருவோம் என்பதை அறிந்திருந்தார் போலும். உப்பிட்ட பன்றித் தொடையும், முட்டைகளும் தயாராகிக் கொண்டிருந்தன. பசி மயக்கத்தில் கோகன் வேக வைப்பதற்காக உப்பிட்டு வைக்கப்பட்டிருந்த பன்றித் தொடை இறைச்சியை என்ன செய்கிறோம் என்ற உணர்வில்லாமலேயே பச்சையாக எடுத்து அப்படியே சாப்பிட்டு விட்டார். சிறிது நேரத்திலேயே அவர் உடல் நிலை மிகவும் மோசமாகி விட்டது. நாங்கள் பெரிதும் கலங்கி விட்டோம். எங்கே அவர் இறந்து போய் விடுவாரோ என்ற அச்சம் கூட ஏற்பட்டது. விரைவில் அவர் உடல் நிலை தேறி விட்டது. ஆனால் அவர் பழைய கோகனாக மேலும் சில வாரங்கள் பிடித்தன.

கோகனுடைய உடல் நிலை எங்கள் திட்டத்தைப் பெரிதும் பாதித்து விட்டது. தலைமையின் கட்டளையைப் பொருட்படுத்தாமல் டப்ளின் நகருக்கே மீண்டும்



படிப்பகம்

www.padippakam.com

திரும்பி விடுவது எங்கள் நோக்கம். அந்த அடிப்படையில்தான் கிரேயனிக்கே வந்திருந்தோம். இப்பொழுது திட்டத்தில் சிறிது மாற்றம் செய்து கொண்டோம். இராபின்சனும், திரேசியும் டப்ளின் நோக்கிப் புறப்பட்டார்கள். நான் கோகன் முழு நலம் பெறும்வரை அவருடனே தங்குவதெனத் தங்கி விட்டேன்.

திரேசியும் இராபின்சனும் எந்தச் சிக்கலுமின்றி டப்ளின் போய்ச் சேர்ந்த செய்தி எங்களுக்குக் கிடைத்தது. அவர்கள் அங்கு ஒரு சில நண்பர்களால் வரவேற்கப் பட்டு பாதுகாக்கப்பட்டுள்ளார்கள். அங்கு அவர்களால் வெளிப்படை யாக நடமாடமுடியாத நிலைதான். வாரம் தோறும் வெளிவரும் காவல்துறை அரசிதழில் (Police Gazette) எங்கள் ஒவ்வொருவரைப் பற்றியும் துல்லியமான விவரங்கள் ஒவ்வொரு வாரமும் வெளி வந்து கொண்டிருந்தன. அத்துடன் எங்களைப் பிடித்துத் தருவோர்க் கான பரிசும் அறிவிக்கப்பட்டிருந் தது.

அதே நேரத்தில் எங்களால் தொடர்ந்து கிரேயனியில் தங்கி யிருக்க முடியவில்லை. கோகன் இப்பொழுது முற்றிலும் தேறி யிருந்தார். தாம்மி மிகல் நெர்னே (Tommy MCl nerney) என்ற தோழரும், திம் ரையான் (Tim Ryan) என்ற தோழரும் எங்களுக்குத் தக்க சமயத்தில் உதவ முன் வந்தார்கள். திம் ரையானுக்கு நெருக்கமான மதகுரு ஒருவர் மேற்கு லிமரிக் நகரில் வாழ்ந்து வந்தார். அவர் எங்களுக்குப் பாதுகாப்பு அளிக்க உறுதி தந்தார்.

மிகல் நெர்னேவின் மகிழுந்தில் லிமரிக் நகரை நோக்கிப் புறப்பட் டோம். மிக உன்னதமான ஒரு மாமனிதரைச் சந்திக்கப் பயணித்துக் கொண்டிருந்தோம். அவர் தம்மு டை'ப பெயர் வெளியிடப்படு வதை விரும்பவில்லை. எங்களு டைய போராட்டத்தில் எங்களுக் குக் கிடைக்கப் பெற்ற மிகவும் உண்மையான நண்பர்களில் அவரும் ஒருவர்.

லிமரிக் நகரை நெருங்கும்வரை எந்த இடையூறுமின்றி பயணம் அமைதியாக இருந்தது. மிகல் நெர்னே வண்டியை ஓட்டிக் கொண்டு வந்தார். அவருக்குப் பக்கத்தில் கோகன் அமர்ந்திருந்தார். நகரை அண்மிக்கும் சமயம், எதிர்த்திசையில் வரிசை வரிசையாக சுமையுந்துகள் விரைந்து வந்து கொண்டிருப்பது தெரிந்தது. எல்லாமே படை வீரர்களைச் சுமந்து வரும் சுமையுந்துகள். ஏதோ ஒரு பெரிய சுற்றி வளைப்பு நடைபெறப் போகிறது என நினைத்தோம். ஆனால் அப் பொழுது எங்களுக்குத் தெரியாது. அவர்கள் எங்களைத் தேடிக் கொண்டுதான் செல்கிறார்கள் என்பது. நாங்கள் மறைந்திருக்கும் இடம் பற்றிக் கிடைத்த செய்தியின்



J.J. கோகன், தந்தை டான் கெல்லி, டான் பிரீன்

அடிப்படையில்தான் அவர்கள் சென்று கொண்டிருக்கிறார்கள் என்பது பின்னர் தெரிய வந்தது.

சோலோ கெட்பெக்கை விட்டுப் புறப்பட்டதிலிருந்து இப்படியொரு நெருக்கடியான பொறியில் நாங்கள் சிக்கிக் கொள்ளவே இல்லை. ஒரு முறை பல்லாக் (Ballagh) என்ற இடத்தில் நண்பர் ஓ'பிரையன் (O' Brien) அவர்களின் மாடி இல்லத்தில் தூங்கிக் கொண்டிருந்த பொழுது நடந்த நிகழ்ச்சியொன்று நினைவுக்கு வருகிறது.

அப்பொழுது நாங்கள் நன்றாக அயர்ந்து தூங்கிக் கொண்டிருந் தோம். திடீரென்று கீழிருந்து கேட்ட புதிய குரல்களின் அரவம் எங்களை எழுப்பியது. கீழே எட்டிப் பார்த் தால் காவலர்கள் பலர் வீட்டிற்குள் நுழைந்து கொர்ண்டிருந்தனர். போரிட்டு மடிவது என்ற முடிவோடு, அவர்கள் மாடியை அடையுமுன்னர், சண்டைக்கு அணியமாகி நிலையெடுத்துக் கொண்டோம். ஆனால் சிறிது நேரத்தில் மேலே வராமல் அவர்கள் வெளியேறிக் கொண்டிருந்தார்கள். வீட்டு உரிமையாளர் நாய்களுக் கான உரிமத்தைச் செலுத்தி விட்டாரா என்பதை உறுதிப் படுத்திக் கொள்ளவே அவர்கள் வந்தார்கள் என்பதை அறிந்த பொழுது வாய் விட்டுச் சிரித்தோம்.

இன்னொரு நிகழ்ச்சி மிச்செல்ஸ் டவுனில் கிறிஸ்டீ ரையான் வீட்டில் நடந்தது. சோலோ கெட்பெக் நிகழ்வு ஆங்கில அரசை எவ்வாறு கலக்கத்திற்குள்ளாக்கி உள்ளது என்பதை அது வெளிப்படுத்தியது. ஆயுதம் தாங்கிய எட்டுக் காவலர் கள் நாங்கள் தங்கியிருந்த வீட்டு வழியாக வந்து கொண்டிருந்தார் கள். நாங்கள் கதவு வழியாகப் பார்த்தோம். அவர்கள் எங்கள் வீட்டைக் கடந்து சென்று கொண் டிருந்தார்கள். ஒரு சிறிய வெடி மருந்துப் பொட்டலத்திற்கு ஆயுதம் தரித்த எட்டுப் பேர்! காவலாகச் சென்றார்கள். அப்பொழுதும் நாங்கள் வாய் விட்டுச் சிரித்தோம்.

ஆனால் இப்பொழுது எதிரே வந்து கொண்டிருக்கும் வீரர்களில் யாரேனும் ஒருவருக்குச் சிறு அய்யம் ஏற்பட்டாலே போதும் எங்கள் கதி அதோ கதிதான்! எங்களிடத்தில் ஏற்படும் சிறு மாறுதலான அசைவுகள்கூட எங்களைக் காட்டிக் கொடுத்து விடும். வண்டியைத் திருப்பி ஓட்டித் தப்பிப்பதும் நடவாத செயல். மகிழுந்தில் பயணம் செய் யும் அயர்லாந்துக் கனவான்கள் போல் படபடப்பின்றி வண்டியை இயல்பாய் முன்னோக்கிச் செலுத் திச் செல்வதுதான் தப்பிக்கும் ஒரே வழி.

வரிசை வரிசையாய் முடிவற்ற சுமையுந்துகள். ஒவ்வொன்றும் எந்திரத்துமுக்கிகள் பொருத்தப்



படிப்பகம்

www.padippakam.com

பட்ட சுமையுந்துகள். ஒவ்வொரு சுமையுந்திலும் முழு அளவிலான ஆயுதபாணிகளாய் படை வீரர்கள்.

எங்கள் மகிழுந்து மெதுவாகச் சென்று கொண்டிருந்த்து. படை வீரர்களையும், அவர்களை ஏற்றிச் செல்லும் சுமையுந்துகளையும் வியப்புக் கலந்த அச்சத்தோடு பார்ப்பதுபோல் பார்த்துக் கொண் டோம். இராச விசுவாசமிக்கக் குடிமகன் ஒருவன் தன்னை ஆளும் பேரரசின் வலிமை மிக்க படையிடத்துக் காட்டும் பயபக்தி எங்கள் பார்வையிலும் வெளிப்பட்டிருக்க வேண்டும். யாருக்கும் எந்த அய்யமும் ஏற்பட்டதாய்த் தெரியவில்லை. பெரும்பகுதி படையணியைக் கடந்து வந்து விட்டோம். எங்கள் வண்டி திருப்பமொன்றில் திரும்பிக் கொண்டிருந்தது. அப்பாடா என்று எங்கள் ஒவ்வொருவரிடமும் பெருமூச்சு வெளிப்படும் நேரம், திடீரென்று திருப்பத்தில் தோன்றிய காவல் வீரன் ஒருவன் ''நிறுத்துங்கள்'' என ஆணையிட்டான். எங்கள் ஓட்டுநர் மிகல் நெர்னே நிறுத்தியை (பிரேக்) அழுத்த, சிறிய குலுங்கலுடன் மகிழுந்து நின்றது.




டான் பிரினீன் 'அயர்லாந்து விடுதலைக்கான எனது போராட்டம்' மிகச் சிறப்பாக உள்ளது.

*- எஸ். சீனிவாசன், மதுரை.*

தமிழ்த் தேசத்தின் சனவரி-பிப்ரவரி 2000 இதழின் அட்டைப்படமான கேலிச் சித்திரம் அற்புதமாக அமைந் துள்ளது. 'தாமரை'யெனும் தூக்குக் கயிற்றால் கலைஞரும், 'இரட்டை இலை'யெனும் தூக்குக் கயிற்றால் மூப்பனாரும் தூக்கிலிடப்பட்டு தொங்குவது போல் அமைக்கப்பட்டுள்ள அந்தச் சித்திரம் வாசகனை உலுக்கியெடுக்கும்; சிந்திக்கத் தூண்டும். கொள்கைகள் பலியாவதைத் துல்லியமாக எடுத்தியம்பியது அக்கேலிச் சித்திரம். மரண தண்டனை எதிர்ப்பாளர் என்ற முறையிலும் 'வேண்டாம் தூக்குத் தண்டனை' எனும் முழக்கத்தை அச்சித்திரத்தின் கீழ்ப் பகுதியில் அச்சிட்டிருக்கலாமே.

ஆர்.எஸ்.எஸ். எனும் மதவெறியமைப்பும் அதன் கிளை வடிவங்களும் விவேகானந்தரை இந்து மத வெறியாளராக சித்தரித்துக் காட்டி ஏமாளித் தமிழனை தன் பக்கம் இழுக்க முற்பட்டுள்ள இந்தக் காலகட்டத்தில் - பிறப்பால் உயர்வுண்டா? எனும் தலைப்பில் சுவாமி விவேகானந்தரை அறிமுகப்படுத்தியுள்ளது பாராட்டுக்குரியது. கவிதைகளின் தேர்வும் சிறப்பாக இருந்தது.

டான் பிரீனின் 'அயர்லாந்து விடுதலைக்கான எனது போராட்டம்' எனும் தொடரின் அசலே தமிழில்தான் எழுதப்பட்டதுபோல் தெளிந்த நீரோட்டமான நடையைக் கொண்டிருக்கிறது. அது ஒரு மொழிபெயர்ப்பு என்ற நெருடலே தெரியாத அளவில் இயல்பான, விறுவிறுப்பான, சுவை குன்றாத நடையில் எழுதப்பட்டுள்ளது. கலைவேலு இன்னும் பல படைப்புகளைத் தமிழாக்கம் செய்து, 'தமிழ்த் தேசத்தை' வலுப்பெறச் செய்ய வேண்டுமென ஏனைய வாசகர்கள் எதிர்பார்க்கின்றனர். செய்வாரா?

*- சிதம்பரன். கி., ஈரோடு.*

தலையங்கம் அவசியம் இடம்பெற வேண்டியதே. ஆங்கிலத்தை ஏன் படிக்கின்றனர் எனப் பார்க்க வேண்டும். அரசு அலுவலகங்களில் பயன்படுத்தும், விண்ணப்பம், அரசு ஆணை, மத்திய அரசு வேலைவாய்ப்புத் தேர்வு என எல்லாவற்றிற்கும் அரசு ஆங்கிலத்தைப் பயன்படுத்திவிட்ட ஆங்கிலத்தை எதிர்ப்பதில் அர்த்தமில்லை.

*- செ. கோவிந்தராசன், திருச்சி.*


## மணமகள் தேவை

முற்போக்குச் சிந்தனை கொண்ட இளைஞருக்கு முற்போக்குச் சிந்தனை கொண்ட மணமகள் தேவை. சாதி, மதம் பொருட்டல்ல. கைம்பெண், கணவரால் கைவிடப்பட்டவர் என்றாலும் விண்ணப்பிக்கலாம். தமிழ்த் தேசம் முகவரிக்கு உறையிலிட்ட கடிதம் அனுப்புக! உறையின் மேல் ''மணமகள் தேவை'' எனக் குறிப்பிடவும்.

பெரியார் சிந்தனை கொண்ட, தனியார் தொழிற்சாலையில் பணி புரியும் 34 வயது இளைஞருக்கு முற்போக்கு சிந்தனை கொண்ட மணமகள் தேவை. சாதி, மதம் பொருட்டல்ல. கைம்பெண் என்றாலும் விண்ணப்பிக்கலாம்.

முகவரிக்கு : இரா. அருட்செல்வன், 'தமிழ்த்தேசம்' 242, ஆர்க்காடு சாலை, வட பழனி, சென்னை - 26.


## முக்கிய அறிவிப்பு

தமிழ் வழிக் கல்விக்கான கருத்துப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்லும் விதத்தில் விரைவில் நீண்ட நடைப் பயணம் செல்லும் திட்டமுள்ளது. பங்கு பெற ஆர்வம் உள்ளவர்கள் எழுத வேண்டுகிறேன்.

*- தியாகு,*
*தமிழ்த் தேசம்,*
*242, என்.எஸ்.கே. சாலை*
*(ஆர்க்காடு சாலை),*
*வடபழனி, சென்னை - 26.*



படிப்பகம்

www.padippakam.com

பன்முகத் தன்மை கொண்ட இந்தியத் துணைக் கண்டத்தை ஒருமுகத் தன்மை உடைய இந்துக்களுக்கு மட்டுமே உரிய - இந்துராஷ்டிரம் ஆக்கி விட வேண்டும் என்பதையே குறிக்கோளாகக் கொண்டு தொடங்கப்பட்டதுதான் ஆர்.எஸ்.எஸ். என்று சொல்லப்படுகின்ற ராஷ்டிரீய ஸ்வயம் சேவக் சங்கம்

**தடை செய்யப்பட்ட ஆர்.எஸ்.எஸ்.**

இந்தியா விடுதலை பெற்றபோது, காந்தியாரின் கருத்துகளும் செயல்பாடுகளும் தங்கள் நோக்கத் திற்கு ஆதரவாக இல்லை என்று கருதிய ஆர்.எஸ்.எஸ். சார்புடைய இந்துமத வெறியர்கள் காந்தியாரைச் சுட்டுக் கொன்றனர்.

காந்தியார் கொலையில் ஆர்.எஸ்.எஸ். அமைப்புக்குத் தொடர்பிருந்ததாக அறிந்த மத்திய அரசு அந்த அமைப்பைத் தடை செய்தது. இந்திராவால் நெருக்கடி நிலை அறிவிக்கப்பட்ட நேரத்திலும் அயோத்தியில் பாபர் மசூதி இடிக்கப் பட்ட வேளையிலும் ஆர்.எஸ்.எஸ். அமைப்பு தடை செய்யப்பட்டது.

ஆர்.எஸ்.எஸ். அமைப்பு அவ்வப்போது தடை செய்யப்படுவதால் அதன் செயல்பாடுகளில் தொய்வு ஏற்பட்டுவிடக் கூடாது எனக் கருதிய ஆர்.எஸ்.எஸ். தலைவர்கள், வேறு பல பெயர்களில் பல்வேறு அமைப்புகளை ஏற்படுத்தினர்.

**சங்கப் பரிவாரங்கள்**

விசுவ இந்து பரிசத், இந்து முன்னணி, பஞ்ரங் தளம் போன்ற மத வெறி அமைப்புகள் அனைத்தும் ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் மாற்று அமைப்புகளே. நேரடியாகத் தேர்தலில் போட்டியிட்டுச் சட்ட மன்றங்களிலும் நாடாளுமன்றத் திலும் ஆர்.எஸ். எஸ்.காரர்கள் நுழைய வேண்டும்; வாய்ப்பு நேர்கையில் ஆட்சிப் பொறுப்பையும் கைப்பற்ற வேண்டும்; ஆனால் ஆர்.எஸ்.எஸ். என்ற அமைப்பின்

# சங் பரிவாரின் சதிச் செயல்கள்

**பேராசிரியர் அறிவரசன்**

பெயரால் இது நடைபெறக் கூடாது என்ற திட்டத்தின் அடிப்படையில் அமைக்கப் பட்ட ஜனசங்கம்தான் பின்னாளில் பாரதிய ஜனதா கட்சி என்ற பெயர் மாற்றத்துடன் அரசியல் களத்தில் பல முறைகேடுகளை அரங்கேற்றி வருகிறது.

ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் அரசியல் பிரிவாகச் செயல்படுகின்ற பா.ஜ.க.வின் மாணவர் பிரிவு அகில பாரதிய வித்யார்த்தி பரிசத் (ஏபிவிபி) என்றழைக்கப் படுகிறது.

சுருங்கச் சொன்னால், விசுவ இந்து பரிசத், இந்து முன்னணி, பஞ்ரங் தளம், பாரதிய ஜனதா, அகில பாரதிய வித்யார்த்தி பரிசத் போன்ற முப்பதுக்கும் மேற்பட்ட மதவெறி அமைப்புகளில் உறுப்பினர்களாகவும், பொறுப்பாளர் களாகவும் இருப்பவர்கள் அனைவரும் ஆர்.எஸ்.எஸ்.காரர்களே. இந்த அமைப்புகள் அனைத்தையும் ஆர்.எஸ்.எஸ். தலைவர்களே பின்னால் இருந்து இயக்குகின்றனர். அதனால்தான் விசுவ இந்து பரிசத், பா.ஜ.க. முதலிய அமைப்புகள் அனைத்தும் சங் பரிவாரங்கள் என்று அழைக்கப்படுகின்றன.

இந்தப் பரிவாரங்களில் ஏதேனும் ஒன்று ஒரு மதவெறிச் செயலில் ஈடுபட்டால், பல்வேறு பெயர்களில் உள்ள பரிவாரங்களைச் சேர்ந்தவர்களும் அச்செயலில் பங்கு பெறுவார்கள். ஆனால், எங்களுக்கு இதில் பங்கில்லை என்று வெளியுலகுக்கு எடுத்துரைப்பார்கள்.

அண்மையில், கங்கைக் கரையில் தீபா மேத்தாவின் 'வாட்டர்' திரைப்படப் பிடிப்புக்கு எதிராக ஆர்.எஸ்.எஸ். காரர்களும் அதன் பல்வேறு பரிவாரங்களைச் சேர்ந்தவர்களும் ஒன்று திரண்டு வன்முறைக் கலவரத்தில் ஈடுபட்டனர். ஆனால், படப்பிடிப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்தவர்கள் விசுவ இந்து பரிசத்தைச் சேர்ந்தவர்கள்





படிப்பகம்

மட்டுமே; அந்த எதிர்ப்பு நடவடிக்கையில் எங்களுக்கு எவ்விதப் பங்கும் இல்லை என்று ஆளும் பா.ஜ.க. - உள்ளிட்ட பிற பரிவாரங்கள் அறிவித்ததை நாம் அறிவோம்.

நாட்டின் பல இடங்களிலும் வன்முறைக் கலவரங்களை நடத்திவிட்டு, எமக்கு அதில் பங்கில்லை என்று நழுவிச் செல்ல வாய்ப்பாகவே, ஆர்.எஸ்.எஸ். அமைப்பு, பல்வேறு பெயர்களில் பரிவாரங்களை அமைத்துள்ளது.

**பச்சைப் பொய்**

அயோத்தியில் கடந்த பல ஆண்டுகளாகவே, இராமன் கோயில் கட்டுவதற்கான ஆயத்தப் பணிகள் மும்முரமாக நடைபெற்று வருகின்றன. பாபர் மசூதியை இடித்ததிலும், மசூதி இருந்த இடத்தில் இராமன் கோயிலைத் தற்காலிகமாக அமைத்ததிலும், தற்காலிக இராமன் கோயில் உள்ள இடத்தில் பல கோடி ரூபாய் செலவில் மிகப் பெரிய அளவில் இராமன் கோயிலைக் கட்டத் திட்டமிட்டதிலும், அப்படி ஒரு கோயிலைக் கட்டுவதான ஆயத்தப் பணிகளைப் பல ஆண்டுகளாக மேற்கொண்டிருப்பதிலும் ஆளும் பா.ஜ.க. உள்ளிட்ட ஆர்.எஸ்.எஸ்.சின் அனைத்துப் பரிவாரங்களுக்கும் பங்கு



ஹெட்கேவார் (ஆர்.எஸ்.எஸ். நிறுவனர்) கோல்வல்கர் தீனதயாள் உபாத்தியா

உண்டு, என்றாலும் இராமன் கோயில் கட்டுவதற்கான பணிகளில் எங்களுக்குப் பங்கில்லை என்று பா.ஜ.க. பச்சைப் பொய்யைக் கூறி வருகிறது.

**பாபர் மசூதி இடிப்பு**

1992ஆம் ஆண்டு திசம்பர் 6ஆம் நாள் அயோத்தியிலிருந்த பாபர் மசூதி இடிக்கப்பட்டது. அன்றைக்குப் பிரதமராக இருந்த நரசிம்ம ராவும்; உ.பி.யில் பா.ஜ.க. அரசின் முதல்வராக இருந்த கல்யாண்சிங்கும் பரிவாரங்கள் பலவும் ஒன்று திரண்டு மசூதியை இடித்ததைத் தடுத்திடவில்லை.

பாபர் மசூதி இடிக்கப்படுவதற்கு முன்பே 1990 செப்டம்பர் முதற்கொண்டே இராமன் கோயிலைக் கட்டுவதற்கான பணிகளைத் தொடங்கி விட்டதாகச் சொல்லப்ப `றது. வெளியுலகுக்குத் தெரியாமல் சிறிய அளவில் நடைபெற்று வந்த வேலைகள், 1998இல் வாசுபேயி பிரதமராகப் பொறுப்பேற்ற பிறகு விரைவாகவும் வெளிப்படையாகவும் நடைபெறத் தொடங்கின.

கோயிலை அமைப்பதற்கான தூண்களையும் சிற்பங்களையும் வடிவமைக்கும் வேலைகள் இராஜஸ்தான் மாநிலத்தில் மூன்று இடங்களில் மும்முரமாக நடைபெற்றன. அங்கிருந்து தூண்களும் சிற்பங்களும் லாரிகளில் அயோத்திக்குக் கொண்டு செல்லப்பட்டன. அது குறித்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் கேள்விகளை எழுப்பியபோது, ''இராமன் கோயிலுக்கான பணிகளை விசுவ இந்து பரிசத் செய்து வருகிறது; அவர்களை நாங்கள் கட்டுப்படுத்த முடியாது; பாரதீய ஜனதா கட்சிக்கோ - பா.ஜ.க. அரசுக்கோ அதில் எவ்விதப் பங்கும் கிடையாது'' என்று உள்துறை அமைச்சர் அத்வானி பதிலளித்தார்.

**பா.ஜ.க. அமைத்த கூட்டணி**

மத்தியில் தனித்து ஆட்சி அமைக்க வாய்ப்பில்லை என்ற நிலையில் பல மாநிலக் கட்சிகளைச் சேர்த்துக் கூட்டணி அமைத்துப் போட்டியிட நேர்ந்தது. மதவாதத்தை எதிர்ப்பதாகச் சொல்லிக் கொண்ட மாநிலக் கட்சிகள், மதவாத அடிப்படையில் பா.ஜ.க. முன் வைத்த மூன்று கோரிக்கைகளைக் கைவிட்டால் மட்டுமே கூட்டணியில் சேர முடியும் என்று தெரிவித்தன.

1) அயோத்தியில் சர்ச்சைக்குரிய இடத்தில் இராமன் கோயில் கட்டுவது, 2) காஷ்மீர் மாநிலத்திற்குச் சிறப்புத் தகுதியை வழங்குகின்ற அரசமைப்புச் சட்டத்தின் 370ஆவது பிரிவை அகற்றுவது, 3) அனைத்து மதப் பிரிவினருக்கும் பொதுவான சிவில் சட்டம் கொண்டு வருவது என்ற மூன்று கோரிக்கைகளை வலியுறுத்தி அரசியல் நடத்தி வந்த பாரதிய ஜனதா கட்சி, எப்படியாவது ஆட்சிப் பொறுப்பில் அமர்ந்துவிட வேண்டும் என்ற துடிப்புடன் மாநிலக் கட்சிகளின் நிபந்தனையை ஏற்றுக் கொள்வதாக அறிவித்துக் கூட்டணி அமைத்து ஆட்சிப் பொறுப்பில் அமர்ந்து விட்டது.

மாநிலக் கட்சிகளின் நிபந்தனையை மீறினால் அந்தக் கட்சிகள் கூட்டணியிலிருந்து விலகிவிடலாம்; அவை விலகிவிட்டால் ஆட்சி அதிகாரத்தை இழக்க நேரிடலாம் என்ற அச்சம் பா.ஜ.க. தலைவர்களிடம் இருக்கிறது. அதே நேரத்தில், அயோத்தியில் இராமன் கோயில் கட்டுவது என்ற அடிப்படைத் திட்டத்தை எப்படியாவது நிறைவேற்றிவிட வேண்டுமென்ற ஆசையும் அந்தத் தலைவர்களைப் பிடித்து ஆட்டி வைக்கிறது.

ஆட்சியும் நீடிக்க வேண்டும்; கோயில் கட்டும் ஆசையும் நிறைவேற வேண்டும். அதனால்தான் விசுவ இந்து பரிசத்தும் அயோத்தியில் அட்டூழியம் செய்வதற்காகவே அமைக்கப்பட்ட 'ராமஜன்ம பூமி நியாஸ்' என்ற அமைப்பும் இணைந்தே இராமன் கோயில் கட்டும்


**கீழைக்காற்று**

வெல்லும்

காலாண்டிதழ்

ஆசிரியர் : எஸ்.என். நாகராசன்

தனி இதழ் ரூ. 15/-
ஆண்டுக் கட்டணம் ரூ. 60/-

தொடர்புக்கு :

மு. குமரவேல், எல்-921, பாவேந்தர் இல்லம்,
பகுதி-10, இராயக்கோட்டை வீட்டு வசதி வாரியக் குடியிருப்பு,
ஒசூர் - 635 109.




www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com

பணிகளை மேற்கொண்டிருப்பதாகவும் ஆளும் பா.ஜ.க.வுக்கு அதில் தொடர்பில்லை என்றும் ஊரறிந்த பொய்யைப் பா.ஜ.க. தலைவர்கள் உரக்கக் கூறி வருகின்றனர்.

1992இல் பாபர் மசூதி இடிக்கப்பட்டது தொடர்பான வழக்கு நீதிமன்றத்தில் இருக்கிறது. அந்த வழக்கில் குற்றவாளிகள் பட்டியலில் இடம் பெற்றுள்ள அத்வானியும் முரளி மனோகர் ஜோஷியும் மத்திய அமைச்சரவையிலும் இடம் பெற்றுள்ளனர்.

ஏழாண்டுகளுக்கு மேலாகியும் வழக்கு விசாரணை முடிந்தபாடில்லை. வழக்கு விசாரணை முடியாத நிலையில், சர்ச்சைக்குரிய இடத்தில் இராமன் கோயிலைக் கட்ட இந்துமத வெறியர்கள் வரிந்து கட்டிக் கொண்டு நிற்கிறார்கள்.

பொல்லாத கட்சியில் உள்ள நல்ல மனிதர் என்று கூட்டணிக் கட்சித் தலைவர்களால் போற்றப்படும் வாசுபேயி, ஆட்சியதிகாரத்தைக் கையில் வைத்துக் கொண்டு, கோயிலுக்கான ஆயத்தப் பணிகள் நடைபெறு வதைத் தடுக்கும் எண்ணமில்லாமல், பா.ஜ.க. அரசுக்கும் அந்தப் பணிகளுக்கும் எந்தத் தொடர்புமில்லை என்று பசப்பிக் கொண்டிருக்கிறார்.

### ஆர்.எஸ்.எஸ். பிரச்சாரகர் – வாசுபேயி

பதின்மூன்று மாதங்கள் பிரதமராகப் பதவியில் இருந்த போது, பதவியிழப்பதற்குச் சில நாட்களுக்கு முன் தில்லியில் உள்ள ஆர்.எஸ்.எஸ். அலுவலகத்திற்குச் சென்று, ஆர்.எஸ்.எஸ். தலைவரிடம், ''நீங்கள் ஆணையிட்டால் இன்றே பிரதமர் பதவியிலிருந்து விலகி, ஆர்.எஸ்.எஸ். பிரச்சாரகராகப் பணியாற்றுவேன்; பிரதமராக இருப்பதைவிடப் பிரச்சாரகராக இருப்பதையே பெருமையாகக் கருதுகிறேன்'' என்று கூறிய வாசுபேயிதான் இன்றும் பிரதமராக இருக்கிறார்! இதுவும் ஆர்.எஸ்.எஸ். தலைமையின் ஆணைதான்!


ராஷ்டிரீய சுயம்சேவக் சங்கத்தின் பரிவாரங்களில் ஒன்றாகிய பா.ஜ.க. அயோத்தியில் இராமன் கோயில் கட்டும் திட்டத்தைக் கைவிட்டு விட்டதாகச் சொல்லிக் கொண்டிருக்கும் அதே வேளையில் வேறொரு பரிவார மாகிய விசுவ இந்து பரிசத்தும் அதன் துணை அமைப்பாகிய ராமஜென்ம பூமி நியாசும் கோயில் கட்டுவதற்கான ஆயத்தப் பணிகளில் தங்கு தடையின்றி ஈடுபட்டிருப்பதும் சங் பரிவாரங்களின் சதிச் செயல் களுக்குத் தக்க எடுத்துக்காட்டுகளாகும்.




தில்லியிலும் உத்தரப் பிரதேசத்திலும் பா.ஜ.க. தலைமையிலான கூட்டணி அரசுகள் பதவிப் பொறுப் பில் உள்ளன. அயோத்தியில் கோயில் கட்டும் திட்டம் இல்லை என்று பா.ஜ.க. தலைவர்கள் கூறுகின்றனர். ஆனால், கோயில் கட்டுவதற்காக அயோத்தியில் நடைபெறும் ஆயத்தப் பணிகளைத் தடுக்க பா.ஜ.க. அரசுகள் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை!

### எவரும் தடுக்கவில்லை

''மாவட்ட அரசு அதிகாரிகளும் மாவட்ட நீதிபதி களும் அவ்வப்போது வந்து ஆயத்தப் பணிகளைப் பார்வையிடுகின்றனர்; ஆனால் அவர்களில் எவரும் பணிகளை நிறுத்துமாறு ஆணையிடவில்லை'' என்று ஆயத்தப் பணிகளை மேற்பார்வையிடும் பொறுப்பில் உள்ள 'அநுபாய் சோம்புரா' என்பவர் கூறுகிறார்.



''கோயிலுக்கான ஆயத்தப் பணிகளை நிறுத்த வேண்டுமென்று அவ்வப்போது நாடாளுமன்றத்தில் சிலர் குரல் எழுப்புகின்றனர்; அந்தக் கோரிக்கை அர்த்தமற்றது'' என்று கோயில் கட்டும் பணிகளைக் கவனிக்கும் பொறுப்பை ஏற்றுள்ள சம்பக்ராய் என்ற வி.இ.ப. பொறுப்பாளர் ஒருவர் கூறுகிறார்.

1992 திசம்பர் 6ஆம் நாள்வரை மசூதி இருந்த இடத்தில் அந்த மசூதியை இடித்துத் தரை மட்டமாக்கியவர்கள் இராமன் கோயிலைக் கட்டுவதற்காக ரூ. 30 கோடியில் திட்டம் தீட்டினார்களாம்; இதுவரை ரூ. 19 கோடி மதிப்புள்ள கோயில் பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன வாம்; எஞ்சிய ரூ. 11 கோடி செலவில் கோயில் கட்டும் பணி நிறைவேறிவிடுமாம். வி.இ.ப.வைச் சேர்ந்த சம்பக்ராய் இதனைத் தெரிவிக்கிறார்.

### நீதிமன்றங்களும்...

ஆர்.எஸ்.எஸ்.சின் பரிவாரமாகிய பா.ஜ.க. கோயிலுக்கான ஆயத்தப் பணிகள் நடைபெறுவதைக் கண்டும் காணாததுபோல் நடிப்பதில் வியப்பேதும் இல்லை. ஆனால், சர்ச்சைக்குரிய இடத்தில் கோயில்



படிப்பகம்

www.padippakam.com

கட்டப்படும் என அறிவித்து, அதற்கான ஆயத்தப் பணிகளில் ஆர்.எஸ்.எஸ். பரிவாரங்கள் ஈடுபட்டிருப்பதைக் கண்டும் தொடர்புடைய நீதிமன்றங்கள் அமைதி காப்பது ஏன்?

அயோத்தியில் பாபர் மசூதி இருந்த இடம் யாருக்கு உரியது? முஸ்லிம்களுக்கா? இந்துக்களுக்கா? - இது தொடர்பாக ஏறத்தாழ 50 ஆண்டுகளுக்கு முன் உத்தரப்பிரதேச உயர்நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கில் இன்னும் தீர்ப்புச் சொல்லப்படவில்லை.

சர்ச்சைக்குரிய இடம் மத்திய அரசின் பொறுப்பில் இருக்கிறது. ''அந்த இடத்தைக் காக்கின்ற பொறுப்பு மட்டுமே மத்திய அரசுக்கு உண்டு; இந்துக்களுக்கோ முஸ்லிம்களுக்கோ வேறு ஏதாவது ஒரு பிரிவினருக்கோ அந்த இடத்தை வழங்குகின்ற அதிகாரம் மத்திய அரசுக்குக் கிடையாது'' என்று உச்ச நீதிமன்றம் ஆணையிட்டுள்ளது.

**சண்டித்தனமா? சதிச் செயலா?**

உ.பி. உயர்நீதிமன்றத்தில் சர்ச்சைக்குரிய இடம் தொடர்பான வழக்கு விசாரணை முடிவடையாத நிலையில், அந்த இடம் மத்திய அரசின் பொறுப்பில் உள்ள நிலையில், உச்ச நீதிமன்றத்தின் ஆணையையும் மதிக்காத வகையில், சர்ச்சைக்குரிய இடத்தில் கோயில் கட்டுவோம் என அறிவித்து, ஆயத்தப் பணிகளுக்காக இருபது கோடி ரூபாயைச் செலவு செய்துவிட்டு, இன்னும் பல கோடி ரூபாய் செலவு செய்வோம் என சங் பரிவாரங்கள் சொல்லித் திரிவது சண்டித்தனமா? சதிச் செயலா?

''சர்ச்சைக்குரிய இடத்தில் கோயிலை நிறுவும் வேலை என்றைக்கு தொடங்கப்படுமோ அன்றுதான் இந்த நாடு 50 துண்டுகளாகும்'' என்று அயோத்தி வாழ் முஸ்லிம் பெருமக்களில் ஒருவராகிய முகமது ஆசிம் எச்சரிக்கை விடுத்திருக்கிறார். அயோத்தியில் பாபர் மசூதியை மீளவும் கட்டுவதற்காக அமைக்கப்பட்டுள்ள குழுவின் தலைவராகவும் பாபர் மசூதி தொடர்பான வழக்குகளில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டிருப்பவருமாகிய முகம்மது ஆசிமின் எச்சரிக்கையைப் பொருட்படுத்தாமல் சங்கப் பரிவாரங்கள் தான்தோன்றித் தனமாகக் கோயில் கட்டும் பணியில் ஈடுபட்டிருப்பது நாட்டு மக்களின் அமைதியைக் குலைப்பதற்கான சதிச் செயல்தான் என்பதில் அய்யம் இல்லை.

**சங்கப் பரிவாரங்களின் 'தர்மம்'**

விசுவ இந்து பரிசத்தும் ராமஜென்ம பூமி நியாசும் நீதிமன்ற ஆணைகளை மீறப் போகின்றனவா? இந்தக் கேள்விக்கு, ''நீதிமன்றத்தின் அணைகள் அல்லது தீர்ப்பு தர்மத்திற்கு உட்பட்டதாக இருந்தால் மட்டுமே அவற்றை ஏற்று நடப்போம்'' என்று வி.இ.ப. தரப்பில் பதில் சொல்லப்படுகிறது. அதாவது நீதிமன்றம் எது சொன்னாலும் அது இந்துக்களுக்குச் சாதகமாக இருந்தால் தான் 'தர்மம்' அதனை ஏற்போம்; முஸ்லிம்களுக்குச் சாதகமாக இருந்தால் அது 'அதர்மம்' - அதனை ஏற்க மாட்டோம்'' இதுதான் சங்கப் பரிவாரங்களின் தர்மம்!

அதாவது முஸ்லிம்கள் பக்கம் நியாயம் இருந்தாலும் அவர்களுக்கு ஆதரவாகத் தீர்ப்பு இருக்குமானால் அது அதர்மம்;

முஸ்லிம்கள் பக்கம் நியாயம் இருந்தாலும் அவர்களுக்கு எதிராகத் தீர்ப்புச் சொல்வதுதான் 'தர்மம்' என்று சங்கப் பரிவாரங்கள் 'தர்மம்' என்பதற்குப் புதிய விளக்கம் தந்து கொண்டுள்ளனர்.

சங்கப் பரிவாரக் கும்பலின் கையில் நாடாளும் அதிகாரம் இருக்கிறது; நாட்டின் அமைதியைச் சீர்குலைக்க இன்னும் என்னென்ன சதிகளில் இந்தக் கும்பல் ஈடுபடுமோ? நினைத்தால் நெஞ்சு பதறுகிறது.






2000 மார்ச்சு 28ஆம் நாள் பெரியாறு அணை தொடர்பான மதுரை ஆர்ப்பாட்டத்தில் தமிழ் தமிழர் இயக்கம்.

தமிழ் வழிக் கல்வியை மறுக்கும் சென்னை உயர்நீதி மன்றத் தீர்ப்பை எதிர்த்து...

2000 சூன் 5 திங்கள் காலை 10 மணியளவில் சென்னை உயர்நீதி மன்றம் மற்றும் மாவட்ட

**நீதிமன்றங்கள் முன் கண்டன ஆர்ப்பாட்டம்**

ஆர்த்தெழுவீர் தமிழர்களே!